Regd. No. M. 4900.

16 பக்கங்கள்.

குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 5-2-1949 சனிக்கிழமை } மலர் 22.

தயங்காதீர்!

எம். சுப்பிரமணியன்

உலகத்துத் தொழில்யாவு மூவந்து செய்யும்
 உத்தமரின் வாழ்வினிலே துளியு மின்பம்
நிலவவிலை! அவர் வாழ்வு நிலவில் லாத
 நீள்வானாய் நிலவுகையில் உழைத்தி டாத
உலுத்தர்களோ நலஞ்சேர்த்தின் கின்பம் கூட்டி
 உயர்வாழ்வு வாழுகிறார். ஏனோ இந்த
நிலை? யென்றேன். அங்கிருந்த உலுத்தன் சொன்னான்
 'நீயறியாய், அதுகடவு ளாணை!' என்றே.

பிழையின்றி நாளெல்லாமுழைத் துழைத்துப்
 பிழைக்கவழி யின்றியுடல் நைந்து மாயும்
தொழிலாளத் தோழர்களே! உடல் நலுங்காத்
 தொழும்பர்களின் கூற்றிதனை ஏற்க வேண்டாம்.
உழைப்பார்க்கே இவ்வுலகில் உணவுண் டென்ற
 உயராணை பிறப்பிக்கும் கடவு ளன்றி
உழைப்பாளர் உருக்குலைய வேண்டு மென்னும்
 ஊதாரி ஆணை செயும் கடவுள் வேண்டாம்.

உங்கள்உடல், வலுவற்ற தெனினும் உள்ளம்
 ஒருசிறிதும் உணர்விழக்க வில்லை யன்றோ?
பொங்கிவரும் பேருணர்ச்சி ஒன்று சேர்ந்தால்
 புல்லர்களின் ஏமாற்றுத் தூள் தூளாகும்!
வெங்கொடுமை யழிந்துபடும்! நீதி வெல்லும்!
 வெள்ளத்தை விரல்வைத்துத் தடுக் கொணாது!
சிங்கங்காள் எழுந்திடுக! மிகுதி நீங்கள்!
 தீயர்களோ மிகக்குறைவு! தயங்க வேண்டாம்.

—சாமி பழனியப்பன்.

நாடு உருப்படுமா?

★

இன்றைய உலகம் போகின்ற போக்கு மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. இதே ரீதியில் போய்க்கொண்டிருந்தால் முடிவு எல்லையற்ற துன்பத்தில்தான் முடியும். இதற்கெல்லாம் உலக வல்லரசுகள் என்று கருதப்படுபவைகளின் ஆதிபத்திய ஆசைதான் காரணம். இன்றைய உலகப் போக்கை நோக்கும் ஒவ்வொரு அறிஞனுடைய உள்ளத்திலேயும் "உலகம் உருப்படுமா?" என்ற வினா எழுந்தேதான் தீருகிறது. விடை தேட முற்பட்டால் வேதனைதான் உருவான பலனாகும். நிகழ்விருக்கும் மூன்றாவது உலக யுத்தம் முடிந்த பிறகுதான் பிரஸ்தாப வினாவிற்குச் சரியான விடை கிடைக்கும். ஆயினும், இன்றும் பல அறிஞர்கள் உலகப் போக்கைப் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை ஹேஸ்யங்களாக கூறிக்கொண்டுதான் இருக்கின்றனர். இந்த ஹேஸ்யங்கள் உருப்படுமா என்பதை வருங்காலத்தில்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

சர்வ தேசிய விஷயங்களை சற்று ஒதுக்கிவைத்து விடுவோம். உலக விவகாரங்களைப் பற்றிய உருப்படியான அபிப்பிராயம் கூறுவதும் முடியாத காரியம். நமக்கு முன்நிற்கும் பிரச்னை நம்முடைய நாடும், நாமும் உருப்படுவோமா? என்பதுதான். அடிமையாக உரிமையிழந்து சீரழிந்து கிடக்கும் நாட்டுமக்கள், தங்கள் சமுதாயத்தின் புனர் நிர்மாணத்தில்தான் கவலை கொள்ள முடியுமே தவிர சர்வ தேசிய விஷயங்களில் அவர்கள் எப்படித் தலையிட முடியும்?

நாடு உருப்படுமா? என்ற தலைப்பு ஒரு கேள்வி. வேதனை நிறைந்த உள்ளத்திலிருந்து வெடித்து வெளிவரும் வினா! நாட்டின் உண்மை நிலை அறியாதாருக்கு இந்தக் கேள்வி விசித்திரமானதாகவும்—புரியாத புதிராகவும் தோன்றும். ஆனால் உண்மை நிலை அறிந்தவர்களுக்கு இந்தக் கேள்வி அவசியமானதாகவும், விடை விரைவில் கண்டுபிடித்தாக வேண்டியதாகவும் தோன்றும். விடை கண்டறிய வீட்டையும், நாட்டையும் விட்டு காட்டிற்கோ, அல்லது சித்தரைப்போல் அரண்மனையையும் அதிலே கிடைக்கும் சுகபோகங்களையும் விட்டு விட்டு அடவிக்கோ செல்லவேண்டியதில்லை. இன்றைய நாட்டின் ஆட்சி முறையையும், அதில் வாழும் மக்களின் மனப்பண்பையும், சமுதாய அமைப்பு முறையையும்துருவித்துருவிஆராய்ந்து பார்த்தால் விடை கிடைத்துவிடும். அப்படிக் கிடைக்கும் விடை இன்றைய ரீதியிலேயே நாட்டு நிலை செல்லுமானால் ஒருக்காலமும் நாடு உருப்படாது என்பதாகத்தான் இருக்க முடியும்!

நாடு உருப்படாதென்று கூறுவதற்கு உள்ள காரணங்கள் இரண்டொன்றுதான். நாட்டு ஆட்சி நல்லாட்சியாக இல்லை. அறிவும்-ஆற்றலும் மறைந்து அறியாமையும்—அடிமைத்தனமும் மக்கள் இதயத்தில் குடிகொண்டிருக்கின்றன. தவிரவும் தனிமனிதன் தன் சொந்த வாழ்விற்காகப்பிறரை வஞ்சித்தும், ஏமாற்றியும் வாழவேண்டிய சூழ்நிலையில் தள்ளப்பட்டிருக்கிறான். உண்மை உழைப்பாளி எவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டாலும் அவனுடைய உழைப்பு கௌரவிக்கப்படுவதில்லை. சமுதாயத்தில் பெரியமனிதர்கள் என்று கருதப்படுபவர்களின் உள்ளத்தில் சூழ்ச்சியும் சுயநலமும் சூழ்ந்து கிடக்கின்றன. நாட்டின் ஜீவநாடிகளான உண்மை உழைப்பாளிகள் தன்னம்பிக்கையற்று, தளர்ச்சியுற்று காணப்படுகின்றனர். மனிதவர்க்கத்தின் முற்போக்கிற்கு அவசியமான சிந்தனையுணர்ச்சி சிறிதுகூட நம்மவரிடம் தென்படவில்லை. இதுபோல் இருக்கும் ஒரு சமுதாயம் எதிர்காலத்தில் உருப்படுமென்று எப்படிக்கூற முடியும்?

ஒரு சமுதாயம் உருப்படுவதற்கு அரசியல் விடுதலையும், பொருளாதார உரிமைகளும் மட்டும் கிடைத்து விட்டால் போதுமா? பகுத்தறிவும், சிந்தனாசக்தியுமற்ற ஒரு கூட்டத்திடம் அரசியலை ஒப்படைத்தால் அது உருப்படுமென்று எப்படிக்கூற முடியும்? உலக அனுபவமும், பகுத்தறிவுமற்ற உதவாக்கரைகளிடம் பணம் குவிந்து கிடக்குமானால் பழனியாண்டவருக்குப்பாலாபிஷேகமும், வெள்ளி ரிஷபமும் செய்ய முற்படுவார்களே தவிர அறிவை வளர்க்கக் கல்விச்சாலைகளையும், நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் தொழிற்சாலைகளையுமா ஏற்படுத்துவார்கள்? ஒன்று முன்னது செய்வர் அல்லது பணத்தை முடக்கிவைத்திருப்பார்கள். இதற்குக் காரணம் சிந்தனை வளர்ச்சி பெறாததுதானே? ஆகவே நாடு உருப்பட அரசியல் விடுதலையும், பொருளாதார உரிமையும் மட்டும் கிடைத்து விட்டால் போதாது, மக்களின் பகுத்தறிவும் சிந்தனையும் வளரவேண்டும்.

சிந்தனை முன்னேற்றத்தின் தாய்—பகுத்தறிவியக்கத்தின் தந்தை-அறியாமையெனும் இருளை அகற்றும் ஒளிக்கதிர்—பழைமையெனும் மூடுபனியை விலக்கும் பகலவன்—முட்டாள் தனத்தை மூடிவளர்க்கும் கோட்டை கொத்தளங்களை தூள்தூளாக தகர்த்தெரியும் டார்பிடோ--மதபோதையில் மூழ்கிக்கிடக்கும் மடையர்களை திருத்துவதற்குள்ள மாற்றுமருந்து—மதத்தின் பெயரால் மடமையை வளர்த்த மதகுருமார்களையும் மண்டியிடச் செய்த மகத்தான சக்திவாய்ந்தது சிந்தனை.

சிந்திக்கும் திறனற்ற நாடும்—மக்களும் சீரழிந்துதான் போகுமே தவிர உருப்படமுடியாது. ஒரு நாட்டின் முற்போக்கையும் பிற்போக்கையும் அளந்தறிய அந்த நாட்டு மக்களின் சிந்தனையைத்தான் அளவு கோலாகக் கொள்ள வேண்டும். நம் நாட்டு மக்களின் சிந்தனை வளரவில்லை என்று கூறுவதைவிட இந்த நாட்டு மக்களிடம் சிந்தனை என்று ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை என்று கூறினால் அதுதான் பொருத்தமாகவிருக்கும். அவ்வளவு தூரம் இந்த நாட்டு மக்கள் பழைமையில் மூழ்கிக் கிடக்கின்றனர். இந்த நாட்டு மக்களும் ஏதாவது

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

காட்சி 30.

[வீதி]

உறுப்பினர்:-சப் இன்ஸ்பெக்டர், ஆடிட்டர், இரஞ்சன், இராகவன், மைனர் வேலன், வேவா (பிச்சைக்காரன் வேடத்தில்)

கதை அமைப்பு:-[சப் இன்ஸ்பெக்டர் பொய்ச்சாட்சிகளைத் தயாரிக்கிறார். வேவா அதே வீதியில் பிச்சைக்கார வேடத்தில் உளவறிகிறான்]

சப் இன்ஸ்பெக்டர்:- ஆடிட்டர் சார்! நீங்கள் சொல்ல வேண்டிய சாட்சியங்களை எல்லாம் நன்றாக உருப்போட்டு விட்டீர்களா?

ஆடிட்டர்:- உருப் போட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்! ஆனால், வக்கீல் குறுக்கு விசாரணையில் எக்கசக்கமாக் கேள்விகளைக்கேட்டுத் திணறடித்து விட்டால் என்ன பண்ணுகிறதென்று தான் யோசிக்கிறேன்...

சப் இன்ஸ்பெக்டர்:- அடே! அந்த அன்னக்காவடிப் பயலுக்கேதுசார்! சொந்த வக்கீல்? ஏதோ! தர்மத்துக்குப் பேசுகிற வக்கீல்! கடனுக்கு ரெண்டு கேள்விகளைக் கேட்கப் போகிறார்! அவ்வளவு தானே! அதெல்லாம் சமாளிச்சுக்கிறலாம் சார்!

ஆடிட்டர்:-சப் இன்ஸ்பெக்டர் சார்! நம் வக்கீல் சொல்லிக்கொடுக்கிறபடி எல்லாம் பாடம் பண்ணிச் சொல்வதென்றாலே எனக்கு ரொம்பக் கஷ்டமான காரியமாயிருக்கிறதே சார்!

சப் இன்ஸ்பெக்டர்:- அடடே! கஷ்டமாயிருக்குதென்று உம் இஷ்டப்படி எதையாவது உளறிக் கொட்டிவிடப் போகிறீர்?

ஆடிட்டர்:-அப்படியே உளறினாலும் உண்மையைத்தானே உளறுவேன்! அதனாலே, உங்களுக்கென்ன சார்!

சப் இன்ஸ்பெக்டர்:- சேச்சே! உண்மையோ! பொய்யோ! வக்கீல் சொல்கிறபடி உருப்போட்டுக் கோர்ட்டில் ஒப்பிச்சுத்தொலைங்க சார்னா...!

ஆடிட்டர்:- உருப் போட்டுக் கொண்டேதான் இருக்கிறேன்! அது உருப்பட்டாத்தானே சார்?

இரஞ்சன்:-[இராகவனோடுவருகிறான்] எதுசார் உருப்படவில்லை? எல்லாம் நம்ம சப் இன்ஸ்பெக்டர் பொறுப்பில் விட்டுவிடுங்கள்! அதுதானே உருப்பட்டுவிடும்!

இராகவன்:-ஆமாம். ஆடிட்டர் சார்! அப்படியே செய்யுங்கள் அதுதான் சுலபமான வழி.

சப் இன்ஸ்பெக்டர்:- என்னப்பா ரஞ்சா! ஆடிட்டர் படுகிற அவஸ்தை இன்னதென்றே தெரியாமல், நீ பாட்டுக்கு என்னென்னமோ உளறிக்கொண்டே வருகிறாயே?

இரஞ்சன்:-என்ன அவஸ்தையாக இருந்தால் என்ன? 'சஞ்சீவி' நீங்கள் இருக்கும் போது சகல ரோக விசாரமும் சம்ஹாரம் ஆக வேண்டாமோ...?

சப் இன்ஸ்பெக்டர்:- மிஸ்டர் ரஞ்சன்! நீர் சொல்வதென்னமோ உண்மைதான்! என் பெற்றோர்கள் எனக்கு வைத்த சஞ்சீவிராவ் என்ற பெயருக்கேற்ப நான் பலருக்குச் செய்திருக்கிற பேருபகாரத்தின் பெருமையைப்பற்றிப் பேசாதார் ஒருவர்கூட இல்லை என்றே சொல்லலாம்? ஆனால், ஆடிட்டர் அவஸ்தையை எப்படித் தீர்ப்பது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை!

இராகவன்:- ஆடிட்டர் படுகிற அவஸ்தைதான் என்ன?

ஆடிட்டர்:- வேறே ஒன்றுமில்லை! நம் வக்கீல் சொல்லிக் கொடுக்கிற பாடம் ஒன்றுமே என் செவியிலும் நுழைகிறதில்லை! மனதிலும் தங்குகிறதில்லை! அவ்வளவுதான்!

இரஞ்சன்:-இதுதானா பிரம்மாதம்? இதற்கு ஒரு வழி இருக்கிறது சார்?

சப் இன்ஸ்பெக்டர்:- என்ன வழி?

இரஞ்சன்:-நம் இராகவனுக்குத் தான் வக்கீல் சொல்லிக்கொடுத்த பாடம் வரவேயில்லை! என்னடா செய்கிறதுன்னு யோசனை பண்ணிப் பார்த்தேன். கடைசியாக ஒரு சுருக்கமானவழி கண்டு பிடித்துவிட்டேன்! இப்போ! எப்படிப் பட்ட கில்லாடி வக்கீலானாலும் சரி. நம்ம ராகவனிடமிருந்து, உண்மையான ஒரு வார்த்தையைக் கூடக் கக்கவைக்கவே முடியாது சார்!

சப் இன்ஸ்பெக்டர்:- அட்டே...! அபாரமா இருக்கே! அந்தக் காரியத்தை எப்படியப்பா செய்து முடித்தே...?

இராகவன்:- வேறு ஒன்று மில்லேசார்! ஒரு சின்னநாடகம்! அவ்வளவு தான்!

ஆடிட்டர்:- நாடகமா? கோர்ட்லேயே போய் நடிப்பதா?

இரஞ்சன்:- கோர்ட்லே மட்டும் என்னசார்? உலகமே...ஒரு நாடக மேடை என்றுதானே சொல்கிறார்கள்...?

சப்இன்ஸ்பெக்டர்:- சரியப்பா! என்னதான் செய்தே சொல்லு பார்க்கலாம்!

இரஞ்சன்:- வக்கீல் சொல்லிக் கொடுத்த பாடங்களை எல்லாம் 'டைலாக்ஸா'கப் பாவித்தேன். இராகவன் அதைப்பேசும் நடிகன். நான் அதைக் கவனிக்கும் டைரக்டர்.

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

மாஜிக் கைதி.

போட்டி

எண் 8.

நான் ஓர் மாஜிக் கைதி. எனக்கு ஓரளவு எழுதப் படிக்கத் தெரியும். இருந்தாலும் கைதி என்ற காரணத்தால் சமூகம் என்னைப் புறக்கணித்துவிட்டது. ஆகவே, நான் இன்று உங்கள் முன் ஒரு பிச்சைக்காரனாகக் காட்சி அளிக்கின்றேன். என்னைப் பிணியும் மூப்பும் சூழ்ந்துகொண்டுவிட்டன. சாக்காட்டைத்தான் எதிர்பார்க்கின்றேன். இயற்கைச் சாவு என்னை விரைவில் ஆட்கொள்ளாதா என்று என் நெஞ்சம் எந்நேரமும் ஏங்கியவண்ணமுள்ளது. செயற்கைமுறையில் என் வாழ்வை முடித்துக்கொள்ளலாம், ஆனால் அது என் கோழைத்தனத்தை அல்லவா காட்டும்.

வாழ்க்கையே ஒரு கலை. அது எல்லோருக்கும் இன்பம் பயப்பதில்லை நுவல்தொறும் அறிவை விரிவாக்கி இன்பம்தரும் நூலைப்போல, வாழ்க்கையும் வாழ வாழத்தான், நமக்கு அக் கலையில் ஒரு தேர்ச்சியையும் இன்பத்தையும் தருகிறது. இத்தனை ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்ததின் பயனாக, நான் எவ்வளவோ தெரிந்துகொண்டுவிட்டேன். என் வாழ்க்கை அனுபவங்களை இன்றைய இளைஞர்கள் அறிவார்களானால், என்னைப்போல சமூகச் சருக்குப் பாறையில், பாசிக் குளத்தில் சருக்கி விழாமலிருப்பார்களல்லவா?

நான் ஓர் ஏழை ஆதிதிராவிடர் குடியில் பிறந்தவன். என் பெயர் பிச்சாண்டி. என் எனக்கு இப் பெயரிட்டனர் என்று நான் பிற்காலத்தில் சில பெரியோர்களைக் கேட்டேன். மண்ணாங்கட்டி, சப்பாணி முதலிய பெயர்களை வைப்பதால், வாழ்க்கையில் அப்பெயர்களையுடையோர் செல்வவந்தராக நல்வாழ்வு வாழ்வர் என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந்துவந்ததால், அதையொட்டியே எனக்கும் என் பெற்றோர் இப்பெயரிட்டனராம். ஆனால், நான் உண்மையிலேயே பிச்சாண்டியாகிவிடுவேன் என்று அவர்கள் எப்படி எதிர்நோக்கியிருக்கமுடியும்?

என் பெற்றோரின் முதுமையில் அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு என் தோள்கள்மீதே விழுந்தது. நான் அவர்களுக்கு ஒரே பிள்ளை. எனக்கோ அப்போது வயது சுமார் இருபது இருக்கலாம். வீட்டில் வறுமை ஆட்சிசெய்கிறது. உணவு, உடை, உறையுள் அனைத்திற்கும் ஒரே பஞ்சம். இப்பஞ்சம் என்னைப்போன்ற ஏழைகளுக்குத்தானே! வானத்தையே கூரையாகக்கொண்ட ஒரு குடிசையில் நாங்கள் வசித்துவந்தோம். சுவர்கள் மழையில் நனைந்துவிட்டால் விழுந்துவிடுமோ என்ற அளவுக்கு அச்சுறுத்தும் பழமையுடையன. எங்கள் சேரியைவிட்டகன்று அக்கிரகாரம் சென்று பார்த்தால் அல்லவோ தெரியும், இரண்டுக்குமுள்ள ஏற்றத்தாழ்வு!

அவர்களோ மேல் சாதிக்காரர்கள்! நாங்கள் அவர்கள் தெருக்களில் செல்லும் தகுதியுமற்றவர்கள். எங்கள் நாய்கள்மட்டும், அத் தெருக்களைச் சுற்றுவதில் தவறுவதுகிடையாது! நாய்களிலும் கீழான நலிந்த வாழ்வு எங்களுடைய பிறப்புரிமைபோலும்! இதை நாங்கள் கூடி எதிர்க்கக்கூடாது. அதற்குத்தானே நாங்கள் அரிஜனங்களாக்கப்பட்டிருக்கிறோம்! அது கிடக்கட்டும், நாங்கள் எங்கே கூடிப்பேசப் போகிறோம், எங்கள் சொந்த வாழ்வு உள்ள நிலைமையில்! மிராசு வெங்கடராம சாஸ்திரி பண்ணையில் நான் ஓர் ஆள்!

எழுபது ஆண்டுகட்கு முன்னர் ஒரு கருப்பு வந்ததாம். விலைவாசிகள் மிகுதியாக ஏறிவிட்டனவாம். மழையே கிடையாதாம். “விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத் துண்ணின்றுடற்றும் பசி” என்ற வள்ளுவர் சொல்லின் பெருமையை மக்கள் உணர ஒரு வாய்ப்பு ஏற்பட்டதாம். விளைவு குறைந்தபோதும், பணக்காரர்களும் பார்ப்பனர்களும் எப்படியோ வயிறு வளர்த்துவிடுகிறார்கள். வள்ளுவர் குறள் அவர்களுடையதல்லவே! ஏழைகள் பட்ட துன்பம் சொல்லிமுடியாதாம். அதுபோன்ற ஒரு கெட்டகாலம் வந்தது எங்கள் ஊர் ஏழைகட்கு. மழைக்குறைவு விளைவைக் குறைத்து மக்களின் ஆயுளையும் குறைக்கத் துவங்கிவிட்டது. பலர் மாளவேண்டிய நிலை ஏற்பட்டது.

மரம் பழுத்தால் வெளவாலை வாவென்றா கூவியழைக்கின்றது? பஞ்சம் பட்டினி, பசி இச் சொற்றொடர்களுடன் பணப்புழக்கமும் இல்லாத நிலையில் ஏழைகளைச் சுரண்ட, மேலும், அவர்களை என்றென்றும் அடிமைகளாக, ஒட்டாண்டிகளாக வைத்திருக்க சிறு குடிசை, சில எஞ்சிய சாமான்கள், மிக்க கஷ்டத்தோடு கஷ்டமாக மீத்தி வைத்த கொஞ்சம் பொன் நகைகள்— இந்தக் கடைசிச் சொட்டு இரத்தத்தையும் உறிஞ்ச சில ‘ஆறுமாதக் கடன்காரர்கள்’ வந்தார்கள். அவர்களைப் பற்றி நானா உங்களுக்கு விளக்கவேண்டும்? நம்நாட்டில் மூட்டுப்பூச்சிகள், காற்று, இக் கடன்கார வடநாட்டுப் பணியாக்கள் இவர்கள் நுழையாத இடமேது? அவர்களில் ஒருவன், தானாக வலியவந்து எங்களுக்குக் கடன் கொடுத்துப்போனான். அவன் பெயர் தற்போது என் நினைவில் இல்லை. உயர்ந்த உருவம். கீழங்கியை விரித்துக் கட்டிக்கொண்டு, முழுக்கைச் சட்டை, வெயிஸ்டு கோட்டு, தலைப்பாகை, ஒரு கைத்தடி, சில ஓலைச் சுவடிகள் இவைகளுடன்தான் அவன் காட்சியளித்தான். நல்ல சிவப்பு, முறுக்கு மீசை, தடித்த ஆள், மிக்க பலசாலி.

கடன் கொடுத்த ஆறாம் மாதம், அதைத் திருப்பிவிடவேண்டும் என்னும் ஒப்பந்தத்துடன்தான் கடன் வாங்கினேன். ஆனால் பாழும் மழை அவ்வாண்டு முழுவதும் இப்படித் துரோகம் செய்யுமென்றா எண்ணினேன். ஆறாம் மாதம் அணுகுவதற்குள், என் அருமைப் பெற்றோர்கள் இறந்தனர். என் வாழ்வு அன்றே இருண்டது என்றெண்ணினேன். பரதேசியாகிவிடலாம், அல்லது மாண்டுபோகலாம் என்றெல்லாம் பாழும் நெஞ்சம் எண்ணிற்று. ஆனால், அவற்றை ஈடேற்ற ஏனோ என்னால் அப்பொழுது முடியவில்லை.

ஆறு திங்கள் உருண்டன. எங்கள் வயிறுகளோ, முதுகை நோக்கி எட்டிப் பிடித்துவிட்டன. குறிப்பிட்ட நாளில் கடன்காரன் வந்தான். எங்கள் நெஞ்சங்கள் கலங்கின. கம்பரைப் படித்து ரசிக்கும் ரசிக சிகாமணிகள்தான் அதை அபிநயம் பிடித்துக்காட்ட வேண்டும். “கடன்பட்டான் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்” என்பதன் உண்மையை நாங்கள் நன்றாக ரசித்தோம் என்று வைத்துக்கொள்ளலாம். அவ்வளவு மனவேதனை. குரங்கு மனம்! கடன் வாங்கும்போது இருந்த அளவு மகிழ்ச்சி ஏன் தற்போது மறைந்துவிட்டது? அதற்கு மாறாக இன்று துன்பம் எங்கள் முகங்களைக் கவ்விக்கொண்டதே. கம்பரசிகர்கள் குரங்கு வேடத்தில் நெஞ்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

மீசையின் ஆசை!

★

“என்னங்க, நாட்டிலே எங்கே பார்த்தாலும் திராவிடர் கழகத்திற்கு ஆதரவு அமோகமாயிருக்கிறது. அதை எப்படியாவது ஒழித்து விட வேண்டும்” இது ஒருவர் பத்து நாட்களுக்குமுன், தன்னைக் கூட்டத்திற்கு அழைக்க வந்த தமிழாசிரியரிடம் கூறியது.

இது ஓமந்தூர்களும், அவினாசிகளும், விருதுநகர்களும் கூறுவது தானே என எவரும் அலட்சியப் படுத்துவர். ஆனால் கூறியவர் தமிழரசு காண முரசு முழக்கும் ம. பொ. சி. என்றதும் திடுக்கிடுவர்.

ஏன்? சிவஞானமோ நம்மைச் சேர்ந்தவர்போலச் சிலர் எண்ணும்படி நடித்தார். ஆனால் உண்மையில் வஞ்சக நெஞ்சு கொண்டவராக இருக்கக் காண்கிறேன். அவர், அவர் கட்சிக்கும் நம் கழகத்துக்கும் அடிப்படையிலேயே வேற்றுமை உண்டு என்று கூறின காலத்திலும், இருபடையும் ஒரே களம் நோக்கிச் செல்கின்றன, சிறிது மார்க்க வேறுபாட்டால், என ஆதரித்தேன். அவர்மீது ஓரளவு மரியாதையும் வைத்தேன்.

திராவிடர் கழகத்து நுழைவு வாசல் தமிழரசுக் கழகம் என்று அண்ணா எழுதினார் என்றால் அர்த்தம் என்ன? இருந்தும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே, முற்காலத்தில் சோழர்களுக்குள் சண்டைகள் நிகழுமாமே, அது போல துரோகம்புரிய நினைப்பது “தமிழரசு”, “தமிழ் முரசு”, “தமிழ்” என ஒலித்துக் கொண்டு திரிபவருக்கு ஏற்றதல்ல, அழகல்ல. பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது என் யோசனை.

“திராவிடர் கழகத்தை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும்” கழகத்தையா? கழகத்தின் சில முக்கியஸ்தர்களையா? கொள்கையையா? ஓர் இயக்கத்தை நசுக்கத் தக்க வழி எதிர்ப்பிரசாரமே என்பதைஓமந்தூரார்க்குஉணர்த்துமளவு அறிவுத் திறன் அமையப் பெற்ற ம. பொ. சி. திராவிடர் கழகத்தை எதிர்த்துப் பிரசாரம்புரிய புறப்பட்டிருக்கிறாரா? இது தமிழரசுக் கழகக் கொள்கைகளுளொன்று என நான் கருதவில்லை! அல்லது அதுவும் ஒரு திட்டமா?

தமிழரசுக் கழகம் தோன்ற வேண்டிய அவசியமேயில்லை. வெண்ணெய் கையிலிருக்கும் பொழுது நெய் வாங்க வேண்டிய அவசியமில்லாதது போல. ஏதோ தோன்றிவிட்டதென்றாலும் “பிஞ்சிலே பழுத்த” இயக்கமாகி விட்டதே என்று தான், மரியாதை வைத்த நான் வருந்துகிறேன்.

திராவிடர் கழகத்தைத் தாக்கி எழுதுவதும், மறைமுகமாகப் பேச்சு மேடைகளில் சாடுவதும் ம. பொ. சி. ஆரம்பமுதல் கையாண்ட முறை. உதாரணமாக, ஒருசமயம் குறிப்பிட்டுள்ளார், “மலையாளத்தார் மனமொப்பாத, ஆந்திரர் ஆதரிக்காத, கன்னடியர் கைக்கொள்ளாத” திராவிடநாடு என்று. அதற்கும் பிறகு, “திராவிடர் என உரிமைகொண்டாடுவது உதைக்கும் காலுக்கு முத்தமிடும் போக்கு” என்று குறிப்பிட்டுள்ளார். அண்ணாவிற்கு பதிலிறுக்கும் பொழுது குறிப்பிட்டுள்ளார், “தமிழகம் எல்லை சிதையாமல் கிடைக்கும்வரை, சோஷலிசக் குடியரசு அமைக்கப்படும் வரை, தமிழர் சுயநிர்ணய உரிமை அடையும் வரை, நாம் “திராவிடர்” என்ற சொல்லைப் பற்றியே ஆராயத் தயாராயில்லை” என்று. போகட்டும், நாம் மேலே குறிப்பிட்டுள்ளவை அவருடைய வாசகங்களா அல்லவா, என்று கூறாவிட்டாலும், கட்டுரையின் அவக்கத்திலுள்ள சொற்கள் சாட்சாத் சிவஞான கிராமணியாருடையதல்லவோ?! அவை அநேக கால வயிற்றெரிச்சலின் விளைவு எனத் தெரியவில்லையா? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது கட்டப்பொம்மன் கட்டளையா? கப்பலோட்டிய தமிழனின் தாக்கிதா? இராமலிங்கரின் அருள் வாக்கா? அல்லது காந்தியார் உபதேசமா? தமிழன் எனக்கூறிக் கொள்ளக் கூச்சப்படவேண்டாமா இவர். சம்சாரத்திலிருந்து கொண்டே சோரம் போகிற “பத்தினி” சொல்வாளா உண்மையை?

திராவிடர் என்ற சொல்லைப் பற்றியே கருதாதவர் திராவிடர் கழகத்தை ஒழிக்க வேண்டும் என்ற கூறினால் அது என்ன? கழகத்திலே குற்றங் குறைகளிருந்தால் வெளிப்படையாகக் கூறட்டும். ஏற்றுக் கொள்ளலாம். அரசியல் தில்லுமல்லுகள் செய்வானேன்? “தமிழால் வைதாரையும் வாழவைக்கும்” முருகன் எழுந்தருளியுள்ள இடம் என்ற எண்ணமா? பத்திரிகைகளில் எழுதும் போதாவது நேர்மை வேண்டாமோ?

“தமிழகத்திலிருக்கும் போது தான் அன்னை மடியிலே இருந்து பெறும் ஆனந்தமடைகிறேன். தமிழே எனது தாரக மந்திரம். ஏ அறிவிலிகளே! உங்கள் செய்கை கன்னித்தமிழை ஆங்கிலத்தின் கால்பிடிக்கும் பணியிலன்றோ நிறுத்துகிறது?” என்று பலவாறு தம் புதிய, திடீர் தமிழ்ப் பற்றை டமாரமடித்த ம. பொ. சி. கூறுகிறார், திராவிடர்கழகத்தை எப்படியாவது ஒழித்து விட வேண்டும் என்று.

தமிழ், தற்சமயம் தன் தகுதியற்றிருக்கிறது என்பதை சிவஞானம் அறிவார். அநேக கிருமிகள் தமிழை மரணப் படுக்கையில்கிடத்தி விட்டன என்பதை ஒப்புக்கொள்கிறார். இப்பொழுது அந்த “தமிழ்த் தாயின்” உயிராவதுநிலைத்திருப்ப

உண்மை பேசு!

★

உண்மையைப்பேசு! உண்மையைப்பேசு!! என்று கூறுகிறார்களே அது என்னவென்றால், மற்றையோர்க்குக் கடுகத்தனை கூடக் கெடுதல் செய்யாதசொற்களைப் பேசுவதுதான்.

பொய்யாய் இருந்தாலும் சரிதான், அப்படிச் சொல்லும் பொய் (தனக்கல்ல) மற்றவர்களுக்குக் கெடுதலைச் செய்யாது நன்மையைத் தரும் என்றால் அதற்குப் பெயர் பொய் இல்லை; அதுதான் உண்மை!

—திருவள்ளுவர்.

தற்கு காரணம் யார் என்பதையும் அறிவார். ஆனால் மயக்கத்தால் யார் யாரையோ காட்டுகிறார் அவர். தமிழ் வளர்ச்சி யார் கையிலிருக்கிறது? இருந்தது, இருந்தால் நலம், என்பதை அறிவார். ஆனால் கடைசிக்கேள்விக்கு பதில் "தான்" என்பதாகத்தான் இருக்க வேண்டும் என்ற பேராசை காரணமோ என்னமோ? "பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பார்களே அதுபோலல்லவோ உள்ளது சிவஞானரின் "சீரிய" கொள்கை.

காந்தியாரின் பெருமையைப் பாடாத நாள் கிடையாது—அவர் மொழிவாரி மாகாணப் பிரிவினையை வலியுறுத்தின காரணத்தைக் காட்டி! அவரின் முதன்மையான முக்கியமான கொள்கை அது. உண்மை! எவ்வளவு தூரம் சிவஞானம் அதைக்கடைப்பிடித்துள்ளார்? குடல்புண் என்று கூறிவிட்டு, தேர்தல் பிரசாரக் கூட்டங்களைக் கூட்டிக்கொண்டு, பதவிபிடிப்போரிலன்றோ ஈடுபடுகிறார். தான் எழுதினதையில்லையென்றும், தவறாக எழுதிவிட்டேனென்றும் அல்லவா கூறுகிறார்!

மொழிவாரி மாகாணப் பிரச்னையை விளக்கும் முறையிலே இந்திப் பிரச்னை விளக்கப்படக் காணோமே! ஏன்? ஒருவேளை ஒரு நாள் ஆர்ப்பாட்டம் நடத்தின போது கொ. மொ. சனார்த்தனத்திடம்கனம் அவிநாசியார் பேசின பேச்சின் விளைவோ? கள் இறக்கும் தொழிலாளர் விஷயத்தில் கவனம் செலுத்தக்காணோம்- கார்ப்பரேஷனிலே கண் பாய்ந்திருக்கிறது. இதை நினைக்கும்போது ஒரே ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது.

மாலை நேரம். மஞ்சள் வெய்யலிலே காதலர் நடக்கும் பாதையிலே தனியே கடற்கரையோரமாக ஒரு வனிதை செல்கிறாள். அவளைப் பின்பற்றிச் செல்கிறான் ஒரு வாலிபன். ஆனால் அவன் அவளைப்பார்த்து ரசிக்கும்வேலையைவிட, எத்தனை பேர் அவளைத் தொடர்கிறார்கள், நமக்கு "ஹோப்" இருக்கிறதா என்ற ஆராய்ச்சி வேலையில் ஈடுபடுகிறான். சிறிது துணிந்த அவன் அவள் செல்லும் வழியே, அவளைத் தொடரும் மற்ற வாலிபர்களையும் கண்காணித்தபடியே பின் தொடருகின்றான். அதுமட்டுமல்ல, அவனுக்குச் சில போட்டி ஏற்படும் போது அவர்களையும் ஒரு "கண்ணில்" வைத்துக் கொள்கிறான். அவ்வாலிபன் செயல்தான் நினைவிற்கு வருகிறது.

"ஒழிக்க வேண்டும்" என்பதை அநேக தடவை சிவஞானம் வெளியிடாமல் மழுப்பியிருக்கிறார். ஒருவேளை தனிப்பட்டவர்கள் எத்தனை பேர்களிடம், முறையிட்டுச் சதியாலோசனை செய்திருக்கிறாரோ தெரியவில்லை. முறைப்படி போரிட வரட்டும், முத்தநாதனாக வருவதுசிவஞானத்திற்கேற்றதல்ல என்பது என் கருத்து.

சென்ற இந்தி எதிர்ப்புப் போரில்தான் ம. பொ. சி. ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கத்தி நீட்டிக் கொண்டிருந்ததாக தலைநிமிர்த்தி, தருக்கோடு கூறுகிறார். இப்பொழுது? மொழிவாரி மாகாணங்கள் பிரியப்போகிறதா? ஆம் என்றால் இவர் கிளர்ச்சியின் (!) பயனாலா? அதற்காவது திட்டமுண்டா? கூடாது எனக்கூறும் நேருவிடம், திராவிடர் கழகத்தினிடம் காட்டும் கோபத்தில் லட்சத்தில் ஒரு பங்கு காட்டினாரா?

ஓர் இருண்ட வீடு, அதில் இருவர் நுழைந்து விளக்கேற்றி வாழ விரும்புகிறார்கள். ஒருவன் தீப்பெட்டியைத் தேடுகிறான். மற்றொருவன் போடா பைத்தியக்காரா! நான் விளக்குத் தேடி வருகிறேன், அதனுதவியால் தீப்பெட்டியும் தேடலாம் மற்றவையும் தேடலாம் என்றானாம். தீப்பெட்டி தேவையா? விளக்கா? சிவஞானர்கள் சிந்திக்க வேண்டும்.

திராவிடர் கழகத்தை ஒழிக்க வேண்டும் என்ற "அவிநாசி" உத்தியோகத்தைக் கைக்கொண்டிருக்கிறாரே ஒழிய, தமிழரசுக் கழக முறைப்படிநடக்கிறாரோ என்றால் சந்தேகம்! அவரேதலைவர்! உறுப்பினர்கள் உண்மையிலேயே என்ன கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை! கழகத்திற்கேற்ற தலைவர்! தலைவருக்கேற்ற உறுப்பினர்கள்!

சிவஞானம் திராவிடக் கழகத்தைப் பற்றிப் பலவாறு நினைக்கிறார். முதலிலே கழகத்தையே தாக்கி வந்தார். பிறகு தலைவரை, அதற்குப் பிறகு தளபதியை, மறுபடியும் பெரியாரோடு சமாதானத்திற்கு வந்தார்.—"தூத்துக்குடி"யைக் கண்டு மகிழ்ச்சியால் துள்ளி! கண்டது என்ன? ஈரோடு! அறப்போர்!! கும்பகோணம்!!! கும்பகோணம் செய்ய எண்ணிய சிவஞானமே! உமக்கு திராவிடர் கழகத்தை அழிப்பதைத் தவிர வேறெந்த வேலை தெரியும் என நான் கேட்கிறேன்.

இந்த இலட்சணத்தில் இவர் தமிழ் நாட்டுக் "காவலனா"ம். ஆம்! உளவில்லாமலா ஊரழியும். காங்கரஸ் வட்டாரத்திலேயே படேல்மிக மிக நல்லவர் என நான் கருதுகிறேன். ஏன்? மனதில் பட்டதை மாற்றாமல், மறைக்காமல், மழுப்பாமல் கூறிவிடுகிறார். "உற்பத்தியைப் பெருக்க நீங்கள் பட்டினியிருந்தாலும் பரவாயில்லை. முதலாளிகளிடம் நாங்கள் என்ன செய்வது? கடவுள் தண்டிப்பார். சமஸ்தானாதிபதிகள் சிறந்த தியாகிகள்!" என்று தொழிலாளர்கள் முன் அவர் பேசும் பேச்சுகளிலிருந்து குறிப்பிடலாம். உறுதிமொழி கூறிவிட்டு பிற்பாடு உதறிவிடுவதைவிட முதலிலேயே முடியாமையைக் கூறிவிட்டு காரியத்தை சுலபத்தில் முடித்து விடுவது நல்லதல்லவா?

இவ்வளவு மோசமான நிலையிலிருப்பார் என நான் கருதவில்லை. ஜமீன், இனாம் ஒழிப்பு மாநாட்டில் உயர்திரு. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் பேசின சிவஞானத்தையும், செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் இந்திஎதிர்ப்பு மாநாட்டில் சொற்பொழிவாற்றின சிவஞானத்தையும்—யார் என்று கூறுவது? அவர்களை எப்படி மறப்பது? முள் நிறைந்த வேலாமரத்தை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் கோடரி முனை மழுங்குமாமே இதையறியாரோ ம. பொ. சி.

சிலர் இவைகளைச் சட்டை பண்ணாமல் "ராணுவச் சிப்பாய்" போலக் கண்மூடி அலட்சியமாய்ப் போவர். அவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன். சிற்றுளியால் கல்லுந் தகரும் என்று! பாம்புக்குப் பாலூட்டி வளர்க்க வேண்டாம்! முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என எச்சரிக்க விரும்பு

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

உரிமை வீரன் டோலட்!

அயர்ந்து கிடக்கும் ஒரு நாட்டை, தங்கள் வலிமையை மறந்து கிடக்கும் ஒரு நாட்டு மக்களை, அந்நாட்டின் சாரமற்ற சனசமூகத்தைத் தட்டி எழுப்புவது உயிருள்ள பேச்சு, வீரமுள்ள வார்த்தைகள். உள்ளம் உருகி, உணர்ச்சியிலிருந்து பேசும் உண்மை வீரனின், சொற்பொழிவு மக்கள் மனதை மருட்சி கொள்ளச்செய்யும். இது சுதந்திரத்தின் முதல்படி. அடுத்துள்ளது அத்தகைய வீரனின் ஆழ்ந்த கருத்துக்களை அடுக்கிக் காட்டும் எழுத்துரிமை. அடிமைப் புத்தியில் ஆழ்ந்து கிடக்கும் தன்தேச மக்களைத் தட்டி எழுப்ப பேச்சு, எழுத்து சுதந்திரங்களைக் கோருகிறான் அந்நாட்டின் விடுதலை வீரன். பேச்சு மூலமாகவோ எழுத்து மூலமாகவோ தனது விடுதலை வேட்கையை வெளியிட விரும்புகிறான், வேறொருவர் அடிமையை அகற்ற விரும்பும் அறிவு வீரன். ஆனால் அவை இரண்டும் ஆளும் வர்க்கத்தாரால் பூட்டிடப்படுமானால் அதையும் மீறுகிறான். மீறியதினால் ஏற்படும், ஆளுவோரின் மிருகத் தண்டனையையும் மிகச் சந்தோஷமாய் வரவேற்பான் வைரமனம் கொண்ட சுதந்திர புருஷன்.

இத்தகைய வீரர்கள் எத்தனையோ பேர் இருந்து மடிந்தார்கள். இந்நிலவுலகில் அவர்களில் தலையாய் நின்றோன், இன்றும் பிரான்ஸ் நாட்டுமக்களின் மனதில் மறைந்திருக்கும் வீரன் தான் 'எடியன் டோலட்' என்பான். உயிரைவேண்டுமானாலும் விட்டுவிடுவான். எடுத்தகாரியத்தை முடிப்பான். வேண்டிய செயலில் அவ்வளவு பிடிவாதம் கொண்டவன். 15, 16-ம் நூற்றாண்டுகளில்தான்மேல் நாடுகளில் கல்வி பரவ ஆரம்பித்தது என்பதை எவரே அறியாதார். அத்தகைய புதிய ஒளி பரவி வந்த சமயமும் நமது வீரன் வாழ்ந்த காலமும் ஒன்றுபட்டிருந்தது. பிரான்ஸ் நாட்டில் மக்கள் புத்தகங்களைப் புரட்டிப் படிக்கப் புறப்பட்டார்கள். அதே சமயத்தில் தான் கிறிஸ்தவ மதப் புரட்சியை அல்ல, சீர்திருத்த உணர்ச்சியையூட்ட அரும்பாடுபட்டார் மார்ட்டின்லூதர்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் பிறந்தான் பிரான்ஸ் நாட்டில் நமது டோலட், எழுத்துரிமைப்போர் வீரன். அவ்வுரிமைக்கே வருந்தி உழைத்தான். வாழ்வைப்பலியிட்டான், அவ்வுரிமைப் போராட்டப் பொற்பீடத்திலே,

இவனின் தாய் தந்தையர் யார் என்பதையோ பிறந்த ஊர் தேதி என்ன என்பதையோ அறியமுடியவில்லை. எப்படியோ சிறு வயதில் லத்தீன் பாஷையைக் கற்பதில் கவலை கொண்டான். சமய நூல்களை ஆராய்வதிலும் மிகக ஆர்வங் காட்டித்தான் வந்துள்ளான். 17வது வயதில் மதுலா என்னுமிடத்திலுள்ள இத்தாலிய சர்வகலாசாலையில் சேர்ந்து பயின்றான். இங்கு 4-ஆண்டுகள்தான் பயின்றான். ஆனால் அவனின் அறிவு மிளிர்ச்சி, உயர்த்தி விட்டது உத்தியோகப் படிப்புக்கு. முதலில் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதியாக கிரேக் நாட்டிற்குச் சென்ற லிமோகஸ் பாதிரியாரின் அந்தரங்கக் காரியதரிசியாக நியமனம் பெற்றுப்புறப்பட்டான். அந்தச் சமயம் அவனுடைய வயதோ 21. அங்கு சென்று அறிவைப் பெருக்க ஆர்வங்கொண்டான். பண்டிதர் ஒருவரின் பிரசங்கத்தைத் தொடர்ந்து கேட்டான், அறிவைப் பெருக்கிக் கொண்டான்.

அதோடு நின்றுவிடவில்லை நமது வீரன். சட்டப் படிப்பில் தேற வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. டொலவுச் என்ற லண்டன் நகரின் சிறந்த இடத்தில் இருந்து கற்க கருத்துக் கொண்டான். சொந்த ஊரை அடைந்தான். சேர்ந்தான் சட்டக் கலாசாலையில். உடனே ஆரம்பித்தன இவனது எதிர்பாராத தொல்லைகள். அந்தக் கலாசாலையில் ஏராளமான மாணவர்கள் எல்லா நாடுகளிலிருந்தும் வந்து பயின்றார்கள். ஒவ்வொரு நாட்டு மாணவர்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அவரவர்கள், அவரவர்கள் நாட்டுக் கொடிகளை வணங்கி, அவரவர்களின் மதகுரு தினத்தை வெகு விமரிசையாய் கொண்டாடி வந்தார்கள். இந்தப் பயித்தியம் பலம்கொண்டது. அதிக ஆடம்பரத்துடன் ஆர்ப்பரிக்க ஆரம்பித்தார்கள் அந்த விழா நாட்களில். மிகத் தொல்லையாக இருந்தது ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு மேலுள்ள அரசாங்க அதிகார வர்க்கத்திற்கும். உடனே ஆரம்பித்தது அரசாங்கம் தனது அடக்குமுறையை வீச. ஷை விழாக்கள் சம்பந்தமான கூட்டங்கள் கூடக்கூடாதென்று உத்தரவிட்டது. அதுபற்றிய பிரசுரங்கள் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பார்த்தனர் மாணவர்கள். ஒன்றுதிரண்டனர், உத்திரவை மீற உறுதியும் செய்தனர். இந்தக் கிளர்ச்சியை உச்சியிலிருந்து நடத்த ஒப்புக்கொண்டான் நமது டோலட். கேட்கவேண்டுமா அன்றைய எதேச்சாதிகார அரசாங்கத்தின் எடுபிடிகள்? இவனை எழுதிக் கொண்டார்கள் அரசாங்கத்திற்கு ஆழமான விரோதி என்று.

இன்றுள்ள ஜனநாயகக்காரர்களின் சரியற்ற காரியங்களைக் கண்டவர்கள், அன்றைய ஏகபோக அதிகாரம் ஒச்சிவந்த இனத்தவரின் இத்தகைய செயலைக்கண்டு சிறிதும் சினங்கொள்ளார். இதற்குத் துணையாக எதிர்பாராத சம்பவம் ஒன்று ஏற்பட்டது. ஒருநாள் தெருவில் சென்றுகொண்டிருந்தசமயம் யாரோ சிலர் டோலட்டை தாக்கினார்கள். எதிர்பாராத தாக்குதலில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள கருத்துக்கொண்ட டோலட், எதிரியை இடித்தான். எக்கசக்கமான இடியால் இறந்துபட்டான் எதிரிகளில் ஒருவன். எதேச்சாதிகாரத்தின் ஏவலர்கள் எட்டிப்பிடித்து இருப்புக்கம்பிக்கொட்டடியில் இட்டுவிட்டார்கள். ஏன் என்று எதிர்வழக்காட இல்லை யாரும் அவனுக்காக. மூன்றுநாள் கழித்து விரட்டிவிட்டார்கள் வரக்கூடாது இந்நாட்டிற்கினி என்று. இது போதும் என்று எண்ணினான் பாரிஸுக்கு எங்கிருந்தால் என்ன என்று. நேராக, முதலாவது பிரான்ஸிஸிடம் சென்றான். அவர் தான் அந்தச்சமயம் அந்நாட்டின் அதிபதியாய் அக்கிராசனம் அமர்ந்திருந்தார். அடைக்கலம் புகுந்தான் அவரிடம். தான் செய்த தவறைத் தள்ளிவிடவேண்டினான். அவருக்கே அர்ப்பணமாக அளித்தான் அதுவரை ஆராய்ந்து எழுதி முடித்திருந்த லத்தீன்பாஷை பற்றிய இரண்டு வால்யூம்களை.

அந்த எழுத்துப் பிரதிகளை அச்சிட்டுக்கொடுக்க ஆள் அகப்படுமா என்றலைந்தான். அதே ஆவலுடன் ரியான்ஸ் நகரைச் சேர்ந்தான். ஏன்? அந்த இடந்தான் அன்று அடைந்திருந்தது புத்தக வெளியீட்டிலும், விற்பனையிலும் முதலிடத்தை. அந்த இடத்தை அடைந்தவுடன் கிளெமண்ட் மாரெட் என்பார் தோழனாகத் தோன்றினார் டோலெட்டுக்கு. கிளெமண்ட் மாரெட் அன்று பிரான்ஸ் நாட்டின் பெரிய கருவியாக இருந்தார் என்றால் எப்படி ஏற்பட்டது இருவருக்கும் தோழமை என எண்ணவேண்டுமா? அதோடு அல்லாது, அவரும் அரசாங்கத்தின் அரிய விரோதிதான். ஏன்? மதவிரோதமான குற்றம் செய்ததற்காக இத்தாலி நாட்டில் இருந்துவந்தார். ஆனால் எத்தனை நாட்களுக்கு இன்னொருவர் நாட்டில் இருந்து வாழ முடியும். அதிலும்நாட்டு மக்களின்கண்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

குடி அரசு

5—2—49 சனிக்கிழமை.

இன்னும் எவ்வளவு நாள் ?

நாடகம் முடிந்து விட்டது! ஆம் ஒண்ணேகால் வருஷத்திற்கு மேலாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திராவிட மாணவர்கள் மீது தொடரப்பெற்று நடந்து வந்த விசாரணை நாடகம் முடிந்து விட்டது!

மாணவர் தலைவர் தோழர் மதியழகனுக்கு 50 ரூ. அபராதம்! இன்றேல் ஆறுவாரம் கடுங்காவல் தண்டனை!

மாணவத் தோழர்களான திருச்சி கோவிந்தன், நாகை திருஞானம், மதுரை கண்ணையன், தருமநல்லூர் திருநாவுக்கரசு ஆகியோருக்கு நூறு நூறு ரூபாய் அபராதம்! இன்றேல் 3-மாதம் கடுங்காவல் தண்டனை!

சிதம்பரம் திராவிடர்கழகத் தலைவர் தோழர் கு. கிருட்டினசாமி அவர்களுக்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை!

இது, பறங்கிப்பேட்டை சப்-மாஜிஸ்திரேட்டால் தரப்பட்டிருக்கும் தீர்ப்பு!

எதற்கு? பார்ப்பனீயம் தான் நாட்டை ஆளுகிறது என்ற ஒரே தைரியத்தினால், பார்ப்பனீயவலையிற் சிக்கியவர்களான, மலையாளத் தொடர்புடைய மாணவத் தோழர்கள், பார்ப்பன ஆசிரியர்கள் பார்த்துக் கொண்டிருக்க, போலீஸ் வீரர்கள் பாதுகாப்புச் செய்ய, இருவர் மூவராய் இருந்த அறைக்குள் இருபது முப்பது பேர் சென்று, தடியாலும் கத்தியாலும் தாக்கி, நடுராத்திரியில், பச்சை ரத்தம் சிந்தச் செய்தும் பட்டு மடியாமல் உயிரோடு இருக்கிறார்களே அதற்காகவா?

சீரழிந்து கிடக்கும் திராவிடத்தைச்சீர்ப்படுத்த முனையும் இளைஞர்களுக்கு—திராவிட மாணவர்களுக்கு—இழிவு நிலையையுணர்ந்து இழிவைத் துடைக்கப் பாடுபடுவோம் எனத் துணியும் இளங்காளைகளுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையாயிருக்கட்டும் என்பதற்காகவா?

பார்ப்பனீய அடிமைகளான காங்கரசாரின் ஆட்சியில், காங்கரஸ் என்கிற போர்வையைப் போர்த்திக் கொண்டு, எந்தக் காலித்தனத்தையும் எப்படிப்பட்ட அடாடுழிய அக்கிரமங்களையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம், கேள்வி கேட்பாடே இல்லை என்பதை வெட்ட வெளிச்சமாக்குவதற்காகவா?

பின் எதற்காக இவர்களுக்குத் தண்டனை?

குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்ட இந்த மாணவத் தோழர்கள், குற்ற நடவடிக்கைகளிலீடுபட்டவர்கள் என்றால், இவர்கள் அந்த குற்ற நடத்தையை யாரிடத்தில் செய்தார்கள்? வாயில்லாத பிராணிகளான மிருகங்களிடத்திலா? உயிரற்ற மரம் மட்டைகளிடத்திலா? அல்லது உயிருள்ள மனிதர்களிடத்திலா?

உயிருள்ள மனிதர்கள்—மற்றொரு கட்சியைச் சேர்ந்தவர்களான மாணவத் தோழர்கள் மீது தான் இவர்கள் குற்ற நடத்தையைச் செய்தார்கள் என்றால், அந்த மாணவத் தோழர்கள் என்ன செய்தார்கள்? ஒன்றுமே செய்யவில்லையா?

ஆனால் உண்மை நடப்பு எப்படி?

பல்கலைக் கழக மாணவர் விடுதியில் பறந்துகொண்டிருந்த திராவிட மாணவ கழகக் கொடியை இறக்கிவிட வேண்டுமென, பார்ப்பன ஆசிரியர்களால் தூண்டிவிடப் பெற்று, சில காங்கரஸ் மாணவர் கழகத்தினர் தகாத வழியில் முயற்சிசெய்திருக்கின்றனர். இம்முயற்சியினால் பிறகு இருசாரரும் கைகலந்திருக்கின்றனர். இந்த ஆர்ப்பாட்டங்களும், காலித்தனமும் ஒரு பொறுப்புடைய பார்ப்பன ஆசிரியருக்கு முன்னால்தான் நடைபெற்றிருக்கின்றன.

இதற்குப்பிறகு அன்றிரவு நடுச்சாமத்தில், சில போலீஸ் வீரர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, சில பார்ப்பன ஆசிரியர்கள் தலைமையில் 40, 50 காங்கரஸ் மாணவர்கள் என்பவர்கள் சேர்ந்துகொண்டு தனியாகவும், இருவராகவும், மூவராகவுமிருந்த திராவிட மாணவர்களைக் கதவுகளைத் திறக்கச்செய்து, ஆடைகளை அவிழ்த்து நிர்வாணமாக்கி, ஒருவருக்கு எட்டுப்பேர், பத்து பேர் என்ற கணக்கில் கைசலிக்க அடித்துத் தடிகளாலும் தாக்கியிருக்கிறார்கள். ஒரு சிலரைக் கத்தியாலும் தாக்கியிருக்கிறார்கள்.

இவற்றின் விளைவாக, இரண்டு தரப்பு மாணவர்களிலும் அடிபட்டுக் காயம்பட்டவர்களில், திராவிடக்கழக மாணவர்கள் என்பவர்கள் தான் எண்ணிக்கையிலும் அதிகமாகி, அபாயமான காயங்களுக்கும் ஆளானவர்கள் என்பதை ஆஸ்பத்திரி சொல்லுகிறது என்று நாம் அறிகின்றோம்.

மாணவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்ட போலீசார், காங்கரஸ் மாணவர்கள் 12-பேர் மீதும் திராவிட மாணவர்கள் 6-பேர் மீதுமாக நடவடிக்கையைத் தொடங்கினார்கள், இரண்டு தரப்பார் மீதும் வழக்கு நடைபெற்று வந்தது என்பதும், மேலே "நாம் அறிகிறோம்" என்பதை வற்புறுத்துவதாகும்.

இந்த நிலையில், சிதம்பரத்திலுள்ள சில காங்கரஸ் தோழர்கள் தலையிட்டு, காங்கரஸ் மாணவர்கள் 12-பேர் மீதுநடந்து வந்த வழக்கை வாபீஸ் வாங்கச் செய்ய வேண்டுமென்று செய்த முயற்சிக்கு, இன்றைய அரசாங்கமும் இணங்கிவிட, மற்றொரு பிரிவினரான 6-பேர், ஒரு வருஷ அலைச்சலுக்கும், பெரும் பொருள் நஷ்டத்திற்கும், படிப்பைக் கெடுத்துக்கொண்ட நிலையில், மேலும் படிப்பைக் கைவிடத்தக்க வகையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆறு பேருள் ஒருவரான சிதம்பரம் கழகத் தலைவர் தோழர் கிருட்டினசாமி, அன்று தற்செயலாகத் தன்னுடைய

சொந்தக்கார மாணவரைக் காணச் சென்றவர். இவரையும் சேர்த்துத் திராவிட மாணவர்கள்—திராவிட இயக்கத்தினர் என்பதற்காக ஏன் இந்தப் பட்சபாதமான நடவடிக்கை?

இதனால் மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பைக் குற்றம் சொல்ல வேண்டுமென்பதோ, அதைச் சரியில்லை என்று இங்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்பதோ நம் நோக்கமல்ல. அந்த நோக்கத்தைச் செயல்படுத்துவதும் பத்திரிகையல்ல.

குற்றம் இழைத்தவர் இருசாரார் என்று குற்றஞ் சாட்டியவர்கள்கூற, அவர்களில் பெரும்பகுதியினரான ஒரு சாராருக்கு விலக்களித்துவிட்டு, மற்றொரு சாராருக்குத் தண்டனை வழங்கட்டும் என இன்றைய நிர்வாகம் விட்டிருக்கிறதே இதைத்தான் என்ன நியாயம்? என்ன நீதி? என்று நாம் மந்திரி சபையினரை-போலீஸ் மந்திரி ஓமந்தூராரைக் கேட்கிறோம்.

காங்கரஸ் ஆட்சியில், காங்கரஸ்காரர்கள் என்பவர்கள் காலித்தனம் செய்தால், அந்தக் காலித்தனத்தை ஆதரித்துக் காங்கரஸ் பிரமுகர்கள் என்பவர்கள் சிபார்சுக்கு வந்தால், அவர்கள் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பது தான் ஆச்சாரியார் ஆட்சியிலிருந்து இன்றுவரை, அதாவது எட்டயாபுரத்திலிருந்து அண்ணாமலை நகர்வரை—ஏன் மேலும்கூட இந்த முறைதான் பின்பற்றப்படும் என்பதைக் காட்டி வந்திருக்கிறோமே, இதை வேறு எடுத்துக்கூறவா வேண்டும் என்பதைத் தவிர மந்திரியார் பதில் கூற வேறு மார்க்கமில்லை என்பதை அறிவோம். ஆகவே இது சரிதானா என்று நாட்டுமக்களைக் கேட்கிறோம்.

காந்தியாரைக் கொலை செய்த கோட்சே கும்பல்களைச் சேர்ந்த ரா. சு. சே. சங்க மாணவர்கள் இன்று—அதாவது காந்தியார் கொல்லப்பட்ட ஒரு வருஷத்திற்குப் பிறகு—மீண்டும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட, அவர்களை இன்றைய நிர்வாகம் தண்டித்திருக்கிறது; பலர் மீது வழக்கும் தொடரப்பட்டிருக்கிறது. இப்படித் தண்டிக்கப்பட்ட மாணவர்களுக்கெல்லாம்விடுதலை! நடந்துவரும் வழக்குகள் எல்லாம் வாபீஸ்! காரணம் இவர்களின் படிப்புக்கு இடையூறு இருக்கக் கூடாது என்று மத்திய அரசாங்கம் உத்திரவு போட்டுவிட்டதாம். மாகாண சர்க்கார்களும் அப்படியே செய்யப் போகிறார்களாம்.

மதவெறியைப் பெருக்கிக் கொலை வெறியை வளர்க்கும் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கெல்லாம், அவர்கள் குற்றவாளிகள் என்று சொல்லப்பட்ட பிறகும் விடுதலை! வழக்குகள் எல்லாம் வாபீஸ்! காங்கரஸ் மாணவர்களும் திராவிட மாணவர்களும் கைகலந்தால், இருவரையும் குற்றவாளிகள் என்று போலீஸ் கூறினால், காங்கரஸ் மாணவர்கள் யார் யாருண்டோ அவர்களுக்கெல்லாம் விடுதலை! திராவிட மாணவர்கள்-திராவிட இயக்கத்தினர் யார் யாரைச் சேர்க்க முடியுமோ அவர்களுக்கெல்லாம் தண்டனை! கடுங்காவல் தண்டனை!! என்றால் இந்த ஆட்சிக்கு என்ன பெயர்? என்று நாம் மக்களைக் கேட்கிறோம்.

தண்டனை பெற்றிருக்கும் நம் மாணவத்தோழர்களில், சிலர் இன்னும் படித்துக் கொண்டிருப்பவர்கள் என்பதையும் மனதில் நிறுத்திப் பார்த்தால் "ஒரு குலத்துக்கொரு நீதி" என்கிற பச்சை மனுதர்ம ஆட்சிதான் இன்று சற்று விரிவடைந்து, ஒரு குலத்துக்கு மட்டுமல்ல, ஒரு கட்சிக்குமொரு நீதி என்கிறமுறைதான் நாட்டை ஆளுகிறதா? அல்லவா? என்று கேட்கிறோம்.

இந்த மனு ஆட்சியின் வக்கிர நடத்தையை—வர்ணாச்சிரமப் போக்கைமறைப்பதற்காகத்தானே இந்த விசாரணை நாடகம் இவ்வளவு நீண்ட நாட்களுக்கு நடைபெற்று வந்திருக்கிறது என்று கேட்கிறோம்.

இந்த மனு ஆட்சி—அல்லது ராமராஜ்ஜிய ஆட்சி இன்னும் எவ்வளவு நாள்?

திருக்குறள் அறிவு!

"அண்ணல்"

"அறிவு" காலச் சக்கரத்தின் அச்சாணி! அந்த ஆணி கழன்றுவிட்டால் உலகம் இல்லை. அது மட்டும் அல்ல, உலகிற்கு முதற் காரணமும் அதுவே! உலகை ஆக்குவதும் அது, பாதுகாப்பதும் அது, அழிப்பதுவும் அதுவே! செல்வத்தையும், அரசியலையும் ஆக்கி, நடத்திப் பயன் தருவதும் அறிவாகவே இருக்கிறது! தீயன விலக்கி, நல்லன சேர்த்து மனித குலத்தை நிலை நிறுத்துகின்றது. எல்லையற்றதாயிருக்கின்றது. உருவம் அற்றதாய், உலகை ஆட்டிப்படைப்பதாய் இருக்கின்றது. எங்கும் நிறைந்து, யாவரையும், தன்னையும், உலகையும் உணரச்செய்து நிலைபெற்றிருக்கின்றது! அறிவு மனிதனை அழிக்கும், மனிதன் அறிவை அழிக்கமுடியாது! அறிவு மனிதனைப் படைக்கும் சக்திவாய்ந்தது. மனிதன் அறிவைப் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ, அது அவனுக்குத் துணையாய்ப் புற்றுக்கோடாய் இருக்கிறது. மனிதன் அறிவைத் தீய வழிகளிலும் பயன்படுத்தலாம். அதற்கும் அறிவே துணை! ஆனால் அந்த அறிவு கடைசியில் அவனையே அழித்துவிடும்! எனவே அறிவின் ஆற்றலை, நம் அறிவைக்கொண்டு ஆராய்ந்து, அதை அன்புகலந்து, அறவழியில் பயன்படுத்த நம் கடமை அறிவு முனைகிறது. அதற்குத் தமிழர்களாகிய நமக்கு வள்ளுவர் துணையாக இருந்து உற்றுழி உதவி செய்கிறார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து வான் புகழ் கொண்ட' நாம், அவ்வள்ளுவனின் உதவியால் நம் நிலையை, வாழ்வை இதுவரை உயர்த்திக் கொண்டோமில்லை. எதிரே கண்ணாடி இருந்தும், அதில் நம் சீரழிவைக் காணாது சிற்றுணர்ச்சியிலே மூழ்கி இருந்தோம், இது நாள் வரை! இனியேனும் வள்ளுவன் காட்டும் அறிவுக் கண்ணாடியில் நம் அகக்கண்ணைச் செலுத்திச் சீர்கேட்டைப் போக்கிச் சிறந்து வாழ்வோமா? அதற்குரிய வழி வகுப்போமா?

நம் முன்னோர்களில் மதவாதி

கள் என்போரும் உண்மை உணர்ந்துதான் இருந்தார்கள். "வாம்பிலா ஞானம் உற்பவ காரணன்"—எல்லையற்ற அறிவே உலகின் தோற்றத்திற்குரிய முதற் காரணம் என்றுகூடப்பாடியிருக்கிறார்கள். 'ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லாத, 'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த' தென்றுகூறியிருக்கிறார்கள். ஆனால் அதே உணர்வு, சூழ்நிலையினால் மாற அதே வாயினால் ஆயிரந் திருநாமமும், அதற்கு ஏற்பட்ட கதைகளும்பாடி கடவுளை விலைப் பொருளாக்கி, கடமையை 'பக்தி'ப் போர்வையிலே மூடிவைத்து, கருத்தை இழிவுக்கு அடகு வைத்து, மூடப் பழக்கத்தையும், முன்னேற்றமில்லாத சமுதாய பொருளாதார வாழ்வையும் ஏற்படுத்திவிட்டார்கள். இத்தகைய இருள் சூழ்ந்த நிலையை, வள்ளுவரின் வாய்மை ஒளி ஊடறுத்துச் செல்கிறது! எப்படி? ஒரு சிறிது பார்க்கலாம்.

ஒரு குலத்துக்கொரு நீதி கூறாது, எம்மதமும் நிம்மதியைக் குலைப்பதே என்ற நேர்மை வழி நிற்கும் வள்ளுவர் 'அறிவே ஆண்டவன்' என்று கூறுகிறார். அதையே நினை, போற்று, தொழு பயன்படுத்து, வாழ்! என்று அழைக்கிறார் வள்ளுவர். முடியாது, 'தோடுடைய செவியனும், அரங்கமா நகருளானும், அரசமரமும், அதன சுற்றுப்புறமும் தான தொழவேண்டியவை' என்று கூறுவோரைப் பார்த்து, 'கற்றதனால் ஆய பயன் என்ன?' என்று கேட்கிறார். அதுமட்டுமல்ல அறிவின் சிறப்பையும், அறிவு எது, அதன் இலக்கணம் எது என்பதையும், அதைப் பயன்படுத்த வேண்டிய முறைகளையும் கூறுகிறார். இன்னும் அறிவின் மூவகைப் பிரிவுகளையும், அவற்றின் தராதரங்களையும், தொடர்பையும் கூட எடுத்துக் காட்டி நம்மைத் திகைக்கவல்ல,—தெளிய வைக்கிறார்! எப்படி?

முதலில் அறிவின் சிறப்பைப் பார்க்கலாம். மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எத்தனையோ வழிகளுண்டு. செல்வம், உடல்பலம், நாடு, அரசு, சட்டம் என்று எவ்வளவோ கூறலாம். ஆனால் அவற்றிலெல்லாம் சிறந்த, தலையாய அரண் அறிவுதான், அறிவே எல்லாப்பாதுகாப்புக்களையும் உண்டாக்கிப் புதுக்கி, வேண்டாததை அழிக்கின்றது. நம் உடல் மறையினும், நம் புகழை மறையவிடாது பாதுகாக்கின்றது. மேலும் யாராலும் அழிக்க முடியாத உள்ளரணாக இருக்கிறது. கோட்டையும், கொத்தளமும்கூட பகைக்கும் அவன் படைக்கும் முன்னே தூள் தூளாகலாம். ஆனால் அறிவு அவ்வளவு எளிதில் உடைந்துவிடுவது அல்ல. அது, உடலோடு உயிரோடு ஒட்டி இருக்கும்வரை, தன்னை உடையவனை, நாட்டைப் பாதுகாக்கும். உலக இரண்டாவது பெரும் போரின் முடிவு நமக்கு அறிவின் முக்கியத்துவத்தையும், அதன் ஆற்றலையும் எடுத்துக்காட்டி விட்டது. எனவேதான்

"அறிவு அற்றங்காக்கும் கருவி;
செறுவார்க்கும்
உள் அழிக்கலாகா அரண்"

என்று குறள் கூறுகின்றது. இத்தகைய அறிவு இருந்தால் வேறு எதுவும் தேவையில்லை. காரணம் தானாகவே அவை யெல்லாம் வரும்! இந்த அறிவு இல்லாவிட்டாலோ வேறு எவை இருந்தும் பயனில்லை. 'அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடையரேனும் இலர்!' என்பது பொய்யாமொழி. இத்தகைய நுண் மாண் நுழை புலம்'—நுணுகிய மாட்சிமைப்பட்ட யாவற்றையும் துருவி ஆராய்ந்த அறிவு இல்லாதவனுடைய, எழில் நலம்—எழுச்சிமிக்க அழகு எப்படிப்பட்டதென்றால், மண்ணாற் செய்யப்பட்டு மாட்சிமை மிகப் புனையப்பட்ட பொம்மையின் அழகைப் போன்றதாகும் என்பது வள்ளுவர் வாக்கு.

மேலும் இத்தகைய அறிவை வளர்த்துச் சிறந்த அறிஞராக ஆகி அடக்கத்துடன் முன்னேற்றமே கண்ணும், கருத்துமாக உழைத்தால் அது நமக்குச் சிறப்புத் தரும். உலகம் நம்மைப் போற்றிப் புகழும். நம்மை அழியவிடாது பாதுகாப்பதே அன்றி மேலும் புகழும், சிறப்பும் தருமென்றால் நாம் அதைப் போற்றாது வாழமுடியுமா! வாழலாமா? "செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து, ஆற்றினடங்கப்பெறின்" என்கிறார். 'அறிவறிந்து'—அறியவேண்டுவனவற்றை அறிந்து என்கிறார் வள்ளுவர். எல்லோரும் எல்லாவற்றையும் அறியமுடியாது. அதற்கு நம் ஆயுளும் போதாது. இன்னும் அறிய வேண்டாதன—ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட முறையில் எவ்வளவோ இருக்கின்றன. அதைப் பிறகு பார்க்கலாம். இவ்வாறு அறிய வேண்டுவனவற்றை அறிந்து நடந்தால், நம் பூதவுடல் மறையினும், புகழுடல் மறையாது. 'சாகாவரம்' பெறலாம். செத்தும் சாகாத நிலை பெறலாம். 'நத்தம் போற் கேடும், உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கல்லால் அரிது!' இது குறள்.

இன்னும் அச்சிறந்த அறிவுடன், முயற்சியும் சேர்ந்தால்—எரியும் அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றியதுபோல்—சுடர்விட்டொளிரும்! தான் மட்டுமின்றி, தன் குடியையும் உயர்த்தலாம்! பொன்றாப் புகழையடைந்த குடும்பமாக ஆகும் அவன் குடி! தான், தன் குடும்பம், உலகம் யாவும் இன்பமுற அறிவு வழி வகுக்கும்! "ஆள்வினையும், ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி" என்பது குறள். குலத்தையுயர்த்தித் தன்னைக் கொண்டவனையும் உயர்த்தும் இந்த அறிவினால் ஆகாததில்லை. அத்துடன் அவனிடம் தோற்றப் பொலிவும் இருந்தாலோ, நினைத்தது நடக்கும். "அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி இம்மூன்றன் செறிவுடையான் செல்க வினைக்கு" எனக் கூறுகிறார். இயற்கையறிவும், அதை வளர்த்துப் பண்படுத்திய செயற்கை அறிவும், அழகும்; இருந்தால் வினை முடிப்பது எளிதாகும். எவ்வளவு உண்மையான—இன்றும் நாம் கண்ணாற் காணும்—கருத்து! இவ்வளவு அழகாக அறிவின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் கூறிய வள்ளுவர், நாம் அத்தகைய அறிவுடன் விளங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். தந்தையைப்போல் தூண்டுகிறார், தாயைப்போல் அன்பு மொழி கூறுகிறார், நண்பனைப்போல் இடித்துக் கூறுகிறார், பகைவனைப் போல் கேலியும் செய்கிறார் வள்ளுவர் நாம் அறிஞர்களாக விளங்க வேண்டும் என்ற அவாவினால்! எவ்வளவு துடிப்பு, ஏக்கம் அவருடைய சொற்களிலே ஒலிக்கிறது

ப்ச்சி நூலக அறக்கட்டளை

தெரியுமா?

முதலில் பெற்றோரைப் பார்த்துச் சொல்கிறார். பெற்றோர்களுக்கு என்ன ஆசை இருக்கும்? தம் குழந்தைகள் அறிவுடனும், அழகுடனும் விளங்க வேண்டும் என்றுதானே ஆசைப்படுவார்கள். அதையே வள்ளுவரும் கூறிப் பெற்றோரைத், தம்குழந்தைகளை அறிவு நிறைந்தவர்களாக ஆக்கும் பணியில் செலுத்த முயல்கிறார். தொடங்கும்போதே 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை' என்கிறார். பெறுகின்ற பேறுகளுக்குள்ளே இதைப் போன்றபேறு வேறு எதுவுமே இல்லையா? அது எது? என்று பெற்றோர்கள் ஆவலோடு கேட்கிறார்கள். அவர்கள் ஆவலைத் தூண்டி, அறிவை வளர்க்க உடனே வள்ளுவர் கூறுகிறார், 'அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்று. அறிய வேண்டுவனவற்றை அறிந்த மக்கட்பேறுதான் சிறந்தது என்றதைக் கேட்டவுடன் தந்தைக்கு ஓர் எண்ணம் தோற்றுகிறது. என் மகனைச் சிறந்த அறிஞனாக்க வேண்டிய கடமை என்னுடையதல்லவா, என்று. இதை அறிந்த வள்ளுவர் மறுபடியும் அவரைத் தூண்டுகிறார், 'உன் மக்களைப் படிக்கவை!' என்று. 'தந்தை மகற் காற்றும் நன்றி, அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்கிறார். உடனே தந்தை நினைப்பாரல்லவா, 'ஆம் என் மக்கள் படித்தால் எனக்கு நலந்தானே' என்று. அதற்கு வள்ளுவர் கூறுகிறார் 'உன் மக்கள் படித்தால் உனக்கு மட்டுமல்ல அப்பனே! ஊருக்கும் நல்லதாகும்' என்று. தம்மில்—தம்மைக் காட்டிலும்; தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிதாகும் என்பது அக்குறட் கருத்து.

தாய் அன்பால் தன் தனயனைப் புகழ்வதுண்டு. தந்தையும், உற்றார் உறவினரும்கூடப் புகழ்வதுண்டு, அன்பு, உறவு காரணமாக. ஆனால் ஊரார் தன் மகனைச் 'சான்றோன்' என்று புகழ, அதை ஒரு தாய் தன்காதாற் கேட்டாளானால் அத்தாய்க்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். 'ஈன்ற பொழுதினும் பெரிது உவப்பாள்' என்று அம்மகிழ்ச்சியின் எல்லை கூறுகிறார் வள்ளுவர். இத்தகைய தாயர் நம்நாட்டிலே பெருகவும், இதுபோல் மகிழவும் இக்குறள் வழிகாட்டியாக இதுநாள்வரை இருந்தும், நாம் 'நருடர்களாய்' வாழ்கின்றோமே இது முறையா? வேண்டாத கதையும் அதற்கு விளக்கவுரையும் கூறும் நாம் குறளை மறந்தது குற்றமல்லவா? இனியேனும் திருந்துவோமா! இவ்வளவு தூரம் தந்தைக்கும், தாய்க்கும் தன் குழந்தையைப் படிக்க வைக்கவேண்டுமென்கிற உணர்வூட்டிய வள்ளுவர், மைந்தனை மாடுபோல் திரி என்று விட்டுவிடவில்லை. அவனையும் அழைத்து அறிவுரை கூறுகிறார், தம்பி! உன் தந்தை உன்னைப்பெற என்ன நல்லதுசெய்தானோ என்றூரார், உலகோர் வியக்க, நீ நன்று படித்து நான்குபேருக்கு மேலானவனாக இரு! என்கிறார். இது உன்கடமை என்று கூறவில்லை. அதைவிட நீ உன் தந்தைக்குச் செய்ய 'உதவி' யாகும். ஏன்? உன் தந்தை தன் மகனைச் சான்றோன் ஆக்கினான் என்று உலகம் ஒப்பவேண்டுமல்லவா, அதற்கு உனது இந்த உதவி முக்கியம் என்றார்.

ஒருநாட்டின் உயர்வுக்கு, அந்நாட்டின் தலைமைப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்களே முக்கிய காரணமென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். அவர்கள் சிறந்த அறிஞர்களாகவும், பொதுநலத்தில் நாட்டங்கொண்ட 'தியாகிகளாக'வும் இருக்கவேண்டும். ஆனால் தியாகப் பெயரைப் பயன்படுத்தி; அறிவிலிகளை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தினால் நாட்டின் நிலை என்னவாகும் என்பது 'ஜனநாயகம்' மலிந்துவிட்ட இந்நாளில் யாவரும் அறிந்ததே. திருவள்ளுவரும் ஒரு நாட்டை ஆட்சிசெய்பவன் அறிஞனாக விளங்கவேண்டுமென்று வற்புறுத்துகின்றார். 'அஞ்சாமை ஈகை, "அறிவு", ஊக்கம் இந்நான்கும்' குறையாது வேண்டுமாம் நாட்டை ஆளும் தலைவர்களுக்கு. மேலும் நாட்டாட்சியில் பங்குபெறும் ஒவ்வொருவருக்கும், அவர்கள் அமைச்சராயினும், தூதுவராயினும், ஒற்றராயினும், படைமறவர்களாயினும் அறிவு முக்கியமென்பதை வற்புறுத்தியுள்ளார் வள்ளுவர்.

நாம் இதுவரை பார்த்தது அறிவு எத்தகையது, எப்படி அடைவது, யார்யாருக்கு வேண்டுவது என்பதுதான். இனி அறிவு எது? அதில் வள்ளுவர் காட்டும் மூவகைப் பிரிவுகள் யாவை? அறிவின் எல்லை எது? அதன் அழிவு எப்படி நேர்கிறது? மனிதனுக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பென்ன? என்பனவற்றை வள்ளுவர் கருத்தின்மூலம் இனி அடுத்த கட்டுரையில் ஆராய்ந்துபார்ப்போம்.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

மையில் ஆர்வம் கொண்டவர்களுக்கு? ஆழ்ந்து யோசித்தார், பிரான்விஸ் மன்னனைப் பிழைபொறுத்துக் காப்பாற்ற வேண்டுவோம் என்ற கருத்தைக் கொண்டார். கடுகிவந்தார் காணாதிருந்த தாய்நாட்டிற்கு, இருவரும் சேர்ந்து எழுதினார்கள் இறைவன் பிரான்விஸ் பெருமானுக்கு புத்தகங்கள் வெளியிட அனுமதி கோரி. மன்னனும் மாரெட்டை முந்திய குற்றங்களுக்கு வகைசெய்யக் கேட்டான். டோலட்டுக்குமட்டும் பத்து வருடங்களுக்குப் புத்தகங்கள் வெளியிட பிறப்பித்தான் லைசென்சை. அதுவும் இத்தாலி, கிரீக், லத்தீன், பிரான்ஸ் இந்த நான்கு பாஷைகளிலும் வெளியிடலாம் வேண்டிய புத்தகங்கள் என்று. 'ஆனால்' என்ற அசட்டு மொழி அரசாங்க உத்தரவுகளில் இல்லாதிருப்பது இன்று கூட மிக அருமை. ஆகவே டோலட்டின் உத்தரவில் 'ஆனால் அச்சிடுவதற்கு முன்னால் அவன் தன்னுடைய எழுத்துப் பிரதிகளை பாரிஸ், பிரான்ஸ் போன்ற இடங்களிலிருந்த இன்னின்னாருக்கு காட்டவேண்டுமென்ற, கண்டிஷன் இருந்தது.

மன்னனின் மனதறிந்து மாரெட் தனது மதவிரோதச் செயல்களுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். டோலட் தோற்றுவித்தார் ஒரு அச்சிடும் அரங்கத்தை. அது ஆரம்பித்த சிறுகாலத்திற்குள் சிறந்த செல்வாக்கையடைந்தது. ஆனால் தன்னலமற்ற தக்கோரிடம் தங்கியிருப்பதில்லை தரணியில் எந்த லாபந்தரும் ஸ்தாபனமும். அதுவும் இரண்டுபேரிடம் எப்படி நிலைத்திருக்கும் நீண்ட நாட்களுக்கு. இந்த இருவரும் வேகமான இரத்தத் துடிப்பைப் பெற்றவர்கள். எதையும் எண்ணி எண்ணிப்பார்த்து இருந்து இருந்து யோசித்து, இதைச் செய்தால் இன்னது வருமே என்பதையும் எண்ணாது எடுத்ததை முடிக்கும் காரியவாதிகள். பயம் என்ற பதத்தையே பரிகசிப்பவர்கள். இரும்பைவிட இறுகிய நெஞ்சங்கொண்டவர்கள். இத்தகையவர்கள் எண்ணியதை எழுத, பேனா பிடித்தால் பெற்றுவிடும் சுதந்திரம். கொஞ்சமும் பின்னடையாது பிந்திய பயத்தால் அவர்கள்

கரங்கொண்ட பேனா.

போலட் எழுதிய லத்தின் பாஷை பற்றிய நூல் பல பதிப்புகள் பரந்தன. பரந்த உலக மக்களிடையே 'புதிய சங்கல்பம்' என்ற பெரும் நூல்கள் பத்தாயிரக்கணக்கில் படிக்கப்பட்டது பணம் கொடுத்து வாங்கி, மக்களால். இந்த வெற்றி எதிரிகளின் கண்களைக் கருக்கியது. எதிரிகள்யார்தெரியுமோ? அவர்கள்தான் மதவாதிகள். இந்த மதவாதிகள்தான் மக்கள் சமூகத்தின் மாசற்ற 'விரோதிகள் என்பதற்கு எத்தனையோ சான்றுகளில் இதுவும்ஒன்று. நமது இந்திய மக்கள் இதையறியாதுதான் இருக்கிறார்கள், காந்தியத்தின் 'கங்காணிகளாகிய ஆரியமத அரசியலில் சிக்கி. உடனே உண்டாக்கினார்கள் உண்மையல்லாத உப கருவிகளை. 1542-ம் ஆண்டு அடைத்தார்கள் கொட்டடியில், மத விரோதமான புத்தகங்களை எழுதி வெளியிட்டான் என்று. நான்கு ஆண்டுகள் நமது போலட் நலிவுற்றான் சிறையிலும் வெளியிலுமாக. உயிருடனிருந்தால் ஆபத்து என்று எண்ணிற்று இறுமாப்புக்கொண்ட மதகுருக் கூட்டம். இட்டது இறுதியாக போலட்டின் உடலை இருகூறாக்க. எழுதி வெளியிட்ட எல்லாப் புத்தகங்களையும் எரித்துச் சாம்பலாக்க.

அன்று அந்நாடுகளில் அரசனைவிட அதிக அதிகாரம் வகித்திருந்தது அந்த மதமனம் கொண்ட மாக்கள்கூட்டம் என்பதை மலையுச்சியிலிருந்து காட்டுகிறது உலக சரித்திரம். ஆகவே போலட்டின் இந்தத் துணையற்ற துயரம் தந்த கேஸ் தெரியவே தெரியாது பிரான்ஸிஸ் மன்னனுக்கு. கடவுளைக்காட்டி காசைப்பிடுங்கி மக்களைக் காட்டுமிராண்டிகளாகக் கண்காணித்துவந்த அந்த கல்மனக் கயவர்கூட்டம் நமது போலட்டின் கழுத்தைக் கத்தரித்தது மாபர்ட் என்ற இடத்தில். ஒரு போலட்டின் உயிர் பறிக்கப்பட்டால், உண்டாவார்கள் யோசிக்கமுடியாத உண்மை வீரர்கள் என்பதை உணரமுடியுமா ஒய்யாரமதவாதிகளுக்கு? மதவிரோதக் குற்றத்திற்காக மடியும் போலட்டுக்கு மக்கள் சிலைகட்டி மனத்தால், வாயால் வாழ்த்துவார்கள், பின்வருங்காலத்தில் என்பதை எப்படி அறியமுடியும் அந்த பேய்க்கூட்டம்? இன்று அவ்வீரன் பலியிடப்பட்ட அந்த இடத்திலேயே எழுந்து நிற்கிறது போலட்டின் உருவச் சிலை. ஒவ்வொரு ஆண்டும் ஒன்றுகூடிப் போற்றுகிறார்கள் அந்த உன்னத உயிர்த் தியாகியை. ஆம் அந்நாட்டின் அறிவுக்கு அடிப்படையான பேச்சு, எழுத்துரிமைகளுக்கு விலைபேசப்பட்ட வீரனை வேண்டாமல், கொண்டாடாமல் என்ன செய்வார்கள் விடுதலை ஆர்வங்கொண்ட மக்கள்?

ஆகவே அழியாப் புகழ்பெற்ற போலட் அறிவித்த கடைசி வார்த்தைகள் இரண்டை மட்டும் எடுத்துக் கொடுக்கிறேன் எனது நாட்டு இனிய வாலிபர்களுக்கு. ஏற்றால் இந்நாடு இன்பமுறும், இல்லை என்றால் இன்னும் சற்று அடிமைப்படும் ஆரியக்கூட்டத்திற்கு என்பதற்கே இதை எழுதினேன்.

போலட் உயிர்விடும் சமயம் கடைசியாக, தனது நாட்டிற்கு விடுத்த மனம் உருக்கும் மெய்மொழிகள்.

"எனக்காக நான் ஏதும் வருந்தவில்லை. ஆனால் விஷயங்களை விளக்கமாக அறிய அறிவு பெறாது அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் எனது இன்ப மக்களுக்காகவே என் நெஞ்சம் துடிக்கிறது.

"வேலன்"

[6ம் பக்கத் தொடர்ச்சி]

கிறேன்.

இங்கு நான் சிவஞானத்துடன் அவர் போன்றோரையும் சேர்த்தே விளிக்கிறேன். நீங்கள் குள்ள நினைப்புகளை கைவிடுங்கள்! தகப்பனைவிட மகன் உயரமாயிருக்கலாம், அழகாயிருக்கலாம், உயர்ந்த அந்தஸ்தும் அடையலாம். என்ன செல்வாக்குப் பெற்றாலும் தகப்பனுக்கு மகன்தான்! டில்லிக்கு பாட்சா ஆனாலும் தல்லிக்கு பிட்டாதான்! எந்த மகனும் இதற்கு விதிவிலக்காயிருந்ததில்லை- இருக்கவும் முடியாது. வேண்டுவது சுதந்தரத் தமிழகம் என்றால் "இதன் செல்வாக்கையழித்து இதை வளர்ப்போமே" என்பது இடக்கூடிய திட்டமல்ல. அப்படிச் செய்யின் ஒன்று நாய் நாட்டுத் துரோகமாயிருக்க முடியும். அல்லது வீபீடண வேலையாயிருக்க முடியும்.

அவருடைய எண்ணமெல்லாம் தமிழரசுக் கழகம் தவிர மற்ற திராவிட, தமிழர் கழகங்கள் கூடாது என்பது போலும். எது எப்படியாயினும் இது இருபதாம் நூற்றாண்டு! சிவஞானர்கள் அரசியல் மௌனம் சாதித்தாலும், தலைமறைந்தாலும், பத்திரிகையிலே "திருகசு"கள் செய்து வந்தாலும், இளைஞர் உலகு இமைகொட்டாமல் நோக்கித்தான் வருகிறது. தற்காலத்தில் சிவஞானம் அவர் வழியே விட்டுவைக்கப்படலாம். வருங்காலம் அவரவர் பலனை அவரவர் அடையாமலிருக்க முடியவே முடியாது. உலக சரித்திரத்தை நோக்குவோருக்கு இது விளங்காமற் போகாது! இன உணர்ச்சி காரணமாக வற்புறுத்திக் கூறுகிறேன், வினை விதைத்தால் வினை தான் அறுக்க வேண்டும்--முடியும்!

தலைவர் பெரியார் தலைமை ஏற்று, ஏச்சுக்கும் எதிர்ப்புக்கும் இடையே வெற்றிகரமாக நடத்தி வந்துள்ளார் திராவிடர் கழகத்தை என்பது நாம் கூறும் வாசகமல்ல—'கல்கி' கூறுவது. சிவஞானர்களை தலையாட்டச் செய்யும் 'அவர்கள்' கூறுவது. நேற்று வந்த சிவஞானம், திராவிடர் கழகத்தை ஒழிக்கப் போகிறாராம். எப்படியோ விளம்பரம் தேடிக் கொள்ள ஆசைப்படுகிறார் பாவம்! ஆனால் இம்முறுக்கு மீசையின் ஆசை எவ்வளவு தூரம் நிறைவேறுகிறது என்பது பொருத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம்.

"ஜானகி மணாளன்"

கருங்கல்பாளையம் பொதுக் கூட்டம்.

-(0)-

ஈரோடு பிப் 3.

ஈரோட்டைச் சேர்ந்த கருங்கல்பாளையம் திராவிடர் கழகத்தின் சார்பில், நேற்றிரவு 7-30 மணிக்குச் சின்ன மாரியம்மன் கோவில் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது.

காங்கரஸ் கோட்டையாக விளங்கிய கருங்கல்பாளையத்தில் இதுதான் கழகத்தின் முதற் கூட்டம் என்பது குறிப்பிடத் தக்கது.

தோழர் வேலாயுதம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தோழர்களான பாலகுரு, அப்பாவு, சுப்பையன், சண்முகவேலாயுதன், மாணிக்கம், கோபி ராஜு முதலியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

தோழர் சுப்பண்ணா நன்றி கூற இரவு 11 மணிக்கு கூட்டம் இனிதே கலைந்தது.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சுக் கலக்கத்தை அபிநயித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் அக் காட்சி?

கடனைத் திருப்பிக்கொடுக்க, வக்கற்ற எங்களில் சில இளைஞர்கள் ஒன்றுகூடினோம், கடன் கொடுத்தவனின் தொல்லை பொறுக்கமாட்டாமல் வடநாட்டானைத் தீர்த்துக்கட்ட முடிவுசெய்துகொண்டோம். கொல்ல அல்ல; உதைத்து, மிரட்டித் துரத்த. அவர்களை எங்களூர்ப்பக்கமே தலைகாட்டாமல் செய்யவேண்டும் என்று. அதன் பயன் என்ன? சிறைவாசம்.

கலைஞர் என். எஸ். கிருஷ்ணன் கூறுகிறாரே, குற்றம்செய்து சிறைசென்றோர் சிறைவாசிகளின் மூன்று விதத்தாரில் ஒருசாரர் என்று. அதில் நாங்கள் குற்றவாளிப் பட்டியலில் சேர நேர்ந்தது. நல்லவர்கள் என்று பெயர்பெற்ற நாங்கள் சிறையை அனுபவித்து வெளியேறியதுமுதல் கேடிகள் என்றழைக்கப்பட்டோம். அன்றுமுதல் வெளியூர்வாசமும், வயிற்றுப்பிழைப்புக்காகத் திருட்டும், அதன் விளைவாகச் சிறைவாசமும் மாறி மாறி என் வாழ்வில் குறுக்கிட்டுவந்தன. என் வாழ்வுச் சீலை நெய்யப்பட்டவிதம் இதுதான். குற்றவாளிகளாகிய எங்கள் குற்றங்கட்கு நாங்களா பொறுப்பாளிகள்? சமூகமே நீ பதில் கூறு! நாட்டில் பட்டினிப்பட்டாளம் பெருகுவதைப் பார்த்துக்கொண்டிருந்த அரசாங்கம் எங்கள் ஏழ்மையைக்கண்டு ஏளனம் செய்யும் முறையில், இந்நாட்டில் எவற்றிலும் ஏகபோக உரிமை கொண்டாடும் பார்ப்பனப் பனியாக்கூட்டங்கள், இவர்களின் நல் வாழ்வைக் காக்க ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள், பணம் காணா எங்கள் வாழ்வின் பயனான பணத்தில் புரளும் செல்வச் சீமான்கள் இவர்களெல்லாம் பொறுப்பாளிகள் அல்லவாம்! உழைத்து உருமாறிப் போய் உலர்ந்த வயிற்றோடு வாடும் நாங்கள் குற்றவாளிகளாம்! நன்று தோழர்களே, இச் சமூக நீதி மிக நன்று!

அவர்களில் ஒருவன் கேடி பிச்சாண்டி. இன்று உண்மையாகவே வாழ்வின் முடிவை நோக்கித் தவம்செய்யும் பிச்சைக்காரன். என்வாழ்க்கைக்கு யார்தான் பொறுப்பாளி? நானா, இச் சமூகமா? இளைஞர்களே சிந்தித்துக் கூறுங்கள்! நான் சருக்கிவிழுந்தவன்! நீங்கள் வாழ்வில் சருக்காமல இருக்க வாழ்வில் உள்ள இடர் போக்குங்கள்! பாசிக்குளத்தில் உள்ள பாசியை அகற்றுங்கள்! பாசியைக் காட்டிக்கொடுத்துவிட்டேன்! என் பொறுப்பு முடிந்துவிட்டது! இனி உங்கள் கவலைதான்!

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவனுக்கு விஸ்வன் வேஷம்! மற்றொருவனுக்கு ராஜன் வேஷம். ராஜன் வேஷத்திலுள்ளவன், விஸ்வன் வேஷத்திலுள்ளவனைச் சுட்டுவிட்டு ஓடுவதாக நடிக்கிறான். இதே மாதிரிப் பல தடவை ஒத்திகைகள் நடத்தினேன். ராகவனுக்குப் பாடம்தானே வந்துவிட்டது. இந்த மார்க்கத்தை ஆடிட்டருக்கும் அனுஷ்டித்தால் பாடம் அரைநொடியில் வந்து விடாதா...?

சப்இன்ஸ்பெக்டர்:- ஆஹா... என்ன அற்புதமான கற்பனையப்பா உனக்கு...!

இராகவன்:- அதிலே! இன்னொரு விசேஷமும் உண்டுசார்! ஒவ்வொரு ஒத்திகையிலும் நம்ம கமலா வந்து நாட்டியம் ஆடும். அப்படி ஆடும்போது அதுடைய கண்வெட்டு ஒன்றே போதும்சார்! நுழையாதபாடமெல்லாம் தானே நுழையும்! வளையாத உள்ளமெல்லாம் அப்படியே வில் போலே வளைந்து கொடுக்கும் சார்ன்னா!!

ஆடிட்டர்:- ஓகோ! அப்படியா? சரி. இனிமேல் வக்கீல் வீட்டில் உட்கார்ந்து வரட்டுத் தவளைமாதிரி உருப்போடாமல், பாடத்தை எடுத்துக் கொண்டு நேரே கமலாபாய் வீட்டிற்கே வந்து விடுகிறேன் சார்!

சப்இன்ஸ்பெக்டர்:- இனிமேலென்ன! இப்பவே வாங்கசார்! போகலாம். அங்கே போய்க் கொஞ்சம் 'ஜாலி'யாப் பேசிக்கொண்டிருந்தாலே! பாடமெல்லாம் தானே வந்து விடும்சார்.

மூவரும்:- ஆகா! அப்படியே செய்வோம் வாருங்கள்.

[நால்வரும் செல்கின்றனர்]

வேவா:- [பிச்சைக்காரன் வேடத்தில் அங்கு வந்து] அய்யா......திரைகடலோடித் திரவியந் தேடித் தேடிய பொருளைத் திருவிழாவுக்கும், தேவடியாளுக்கும் செலவு செய்யும் புண்ணியவானுங்களே...இந்த ஏழை முகத்தைக் கொஞ்சம் பாருங்களே... அய்...யா...!! உங்கசாமிங்களுக்கு கூடம் சாம்பிராணி...உங்க பிள்ளைகளுக்குப் பட்டாஸ் கட்டு...உங்க வாய்க்கு வெத்திலை பாக்கு...இந்த ஏழை வயித்துக்குச் சோறு சாமி...சோறு...ஒரு காலணாப் போடுங்க...மவராசமார்களே...ஒரு காலணா...

வேலன்:- டேய்! பிச்சைக்காரப் பயலே! இங்கே வாடா. இது என்ன தெருவுன்னு தெரியுமாடா?

வேவா:- தெரியாதுங்களே சாமி!

வேலன்:- இதுதாண்டா...தாசி கமலாபாய் தெரு...

வேவா:- அய்யய்யோ...! நான் தெரியாமே இங்கே வந்துட்டேனுங்களே சாமி...

வேலன்:- ஏண்டா இப்படிப் பயப்படுறே....?

வேவா:- ஏஞ்சாமி! இங்கே யாரோ ஒரு மில்லாபீஸுக்காரரைச் சுட்டுக் கொன்னு போட்டாங்களாமே...?

வேலன்:- அதைப்பற்றி உனக்கென்னடா கவலை? சரி அது கிடக்கட்டும்! நான் ஒரு சாமான் தருகிறேன் அதைக்கொண்டுபோய் அந்தக் கமலாபாய் வீட்டுக்குள்ளே செக்கச் செவேருனு ஒரு வேலைக்காரக் குட்டி இருக்கா அவளிடம் கொடுத்துடுறியா?

வேவா:- அது என்ன சாமானுங்க?

வேலன்:- [மடியிலிருந்து எடுத்துக்காட்டி] இதோ பாரு இதுதான்! ஜம்பருக்குள்ளே போட்டுக்கிற பாடி.

வேவா:- ஏஞ்சாமி! இதை நீங்களே கொண்டு போயி கொடுத்துட்டா...என்னாங்க?

வேலன்:- அப்படிச் செய்யத்தான் எனக்கும் ஆசை! இதைக் கொடுத்தாற்போலும், குட்டிக்கு ஒரு 'ம்ச்சு' கொடுத்தாற்போலும் இருக்கும் என்று, நானும் வெகு நேரமாகக் காத்துக்கொண்டே இருக்கிறேன். அந்தப் பயலுங்க வெளியே போனாத்தானே?

வேவா:- எந்தப் பயலுங்க சாமி?

வேவா:- அவனுங்கதாண்டா! அந்த மில்லாபீஸுக்காரர் சுடப்பட்டாரென்றாயே... அவருடைய சிநேகிதனுங்களும் சப் இன்ஸ்பெக்டரும்!

வேவா:- ஏஞ்சாமி! அவனுங்களுக்கெல்லாம், அங்கே சதா வேலை இருந்துக்கினே இருக்குமா சாமி!

வேலன்:- ஏண்டா! தாசி வீட்டுக்குப் போறவுங்க வேலை இல்லாமலா போயிக்குனும் வந்துக்குனும் இருக்காங்க? உம். அந்தப் பயலுங்களோ கோட்லே சாட்சி சொல்ல வேண்டிய பாடங்களை

யும் எடுத்துக்குனு அங்கே வந்து 'ஜாலியா' படிச்சுக்குனு இருக்கானுங்க! அவனுங்க இப்பவா போகப் போறானுங்க? எனக்கோ இந்தப் பாடியை வைச்சுக்குனே இருக்கப் பயமா இருக்கு?

வேவ:- ஏஞ்சாமி பயப்படனும்?

வேலன்:- ஒண்ணுமில்லேடா! இந்தப் பாடியை.........ஒரு ரெடிமேட் ஸ்டோரிலிருந்து சும்மா எடுத்துக்குனு வந்துட்டேன். எங்கே அந்தக் கடைக்காரப் பயலுங்க வந்து, நான் இதைத் திருடிக்கினு வந்துட்டேனு பிடிச்சுக்குவானுங்களோன்னு நான் நெஞ்சு ....! டப்பு......டப்புன்னு அடிச்சுக்குது......! நீ கொஞ்சம் உதவி செய்யமாட்டே......?

வேவா:- [அந்தப் பாடியைக் கையில் வாங்கிக் கொண்டு] ஓ! ரெடியாச் செய்றேனுங்க! இதுக்குக்கூட உதவாத இந்தக் கட்டை ...என்னத்துக்குத்தானுங்க இருக்குது...? ஆமாங்...சாமி! உங்க பேரென்னாங்க...?

வேலன்:- வேலன் என்று சொல்லு, தெரிஞ்சுக்குவாள்!

வேவா:- அந்த அம்மா பேரு?

வேலன்:- வள்ளியம்மே...

வேவா:- உங்க தெருப் பேரு?

வேலன்:- கந்தசாமி கோவில் தெரு...

வேவா:- கதவு நெம்பரு?

வேலன்:- நூத்திப்பதினொன்னு! இதெல்லாம் உனக்கென்னத்துக்கடா...?

வேவா:- ஒன்னுத்துக்குமில்லீங்க! நீங்கபோயி வூட்டுலேதானே யிருப்பீங்க...! சரிப் போங்க.... ஆளை...வரச்சொல்றேன்.

வேலன்:- யாரையடா?

வேவா:- [அந்தப் பாடியைக் காட்டி] இதுக்குச் சொந்தக்காரங்களேத் தானுங்க!

வேலன்:- ஐய்யய்யோ! 'ரெடிமேட் ஸ்டோர்'க்காரங்களையா...?

வேவா:- என்னத்துக்குச் சாமி இப்படிப் பயப்படுறீங்க? இதைப் போட்டுக்கப் போறாங்களே! உங்க வள்ளியம்மே......அவுங்களேத் தானுங்களே சொன்னேன்...

வேலன்:- அதெல்லாம் நீ ஒருத்தரையும் வரச் சொல்ல வேண்டாண்டா பிச்சைக்காரப் பயலே! அதைக் கொண்டுபோயி வள்ளியம்மேகிட்டே வேலன் கொடுத்தாருனு சொல்லிக் கொடுத்துவிடு! அவ்வளவுதான். சரி இந்தா இந்த ஒரு அணாவைத் தருமமோ! கூலியோ! எப்படியோ வைச்சுக்கோ போடா!

வேவா:- சரித்தானுங்க சாமி!

[என்று ஒரு அணாவையும் வாங்கிக் கொண்டு போகிறார்]

காட்சி 31.

[சிறைச்சாலை]

உறுப்பினர்:- இராஜன், போலீஸ்கள்.

கதை அமைப்பு:- [இராஜன் தன் நிலையையும்; விமலாவின் நிலையையும் உணர்ந்து உள்ளம் உருகிக் குமுறுகிறான்.]

போலீஸ்கள்:- [சிறைக் காவல் புரிகின்றனர்.]

இராஜன்:- (13) [பாட்டு. 'உடல் ஆவியும்போல்...' என்ற மெட்டு.]

பொருள் போகமும்மேல் சாதிக்
 கென்றே ஆகியதேபோல்
பொய்யர் வாதம் மெய்தானா
 சமநீதம் பொய்தானா (பொ)
பலர் மனம் வருந்த சிலர் மனம்
 களித்திடுவார்
வாழ்நாள்களெல்லாம் வீண்
 பொழுதாய்க் கழித்தே விட்டி
  டுவார்
பொய்யர் வாதம் மெய்தானா
 சமநீதம் பொய்தானா (பொ)
உழைக்கும் உலகும் மேலும்
 துன்பக்கடலில் மூழ்கிடுமா
பொய்யர் வாதம் மெய்தானா
 சமநீதம் பொய்தானா (பொ)

பொய்! பொய்யே சமுதாயமாகச் சமைந்த பொல்லாத உலகமே! கையுங் களவுமாகக் கண்டுபிடிக்கப்பட்ட எத்தனையோ குற்றவாளிகளையும், கொலையாளிகளையும் சட்டப்படி நிரூபிக்கப்படவில்லையே என்று கூறி தப்பித்துக் கொள்ள விட்டுவிடுகின்றாய்! ஆனால், ஒரு குற்றமும் செய்தறியாத எத்தனையோ நிரபராதிகளை, வஞ்சகர்களின் சூழ்ச்சியினால் சிறைச்சாலையில் வதியவும், தூக்குமேடையில தொங்கவும் செய்துவிடுகின்றாயே! என்னே உன் கொடுமை! என்னே உன் அதர்மம்!! என்னே உன் வஞ்சகம்!!!

வஞ்சகம்! ஆம். வஞ்சகமேதான்! நெஞ்சார அறிந்த பொய்யும், புரட்டும், பித்தலாட்டங்களும் நிறைந்த ஏடுகளையே வேதங்கள் என்று போதித்து, இந்நாட்டை ஆட்சி புரிந்த மன்னர்களின் வர்க்கத்தைப் பட்டினிப் பட்டாளம் ஆக்கிய நயவஞ்சகமே! அஞ்சாமல் நெஞ்சாரப் பொய் பேசுவதையே தொழிலாகக் கொண்ட ஒரு சில நயவஞ்சகக் கூட்டம் மட்டும் வயிறு வளர்க்க உதவும் நஞ்சனைய வஞ்சகமே!!

இந்நாட்டு ஆரணங்குகளுக்கு மட்டும் ஆகாது மறுமணம் என்று கூறிவிட்டுக், கன்னிப்பெண்களைக் கோவிலில் கொண்டுபோய்ப் பொட்டுக் கட்டித் தட்டுவாணிகளாக்கிக், கொட்டு மேளத்துடன் கூத்தடிக்கும் மகாக் கொடிய நயவஞ்சகமே!!!

உன் பெயர்தான் வேதம்! உன் பெயர்தான் நீதம்!! உன் பெயர் தான் தர்மம்!!! இது ஆகுமா? இதுதான் சமதர்மமா? இப்படி நடப்பதுதான் சத்தியமா?

அசத்தியமேஉருவாகக்கொண்ட முதலாளித்துவக் கும்பலின் சுயநலத்திற்காகப் பாட்டாளிகளிடமிருந்து பூசாரிகள் மூலம் எழுதி வாங்கிய அடிமைச் சாசனங்களல்லவா அவைகள்? ஆம். அவைகளைக் கிழியுங்கள்! எரியுங்கள்!! நாசமாக்குங்கள்!!! அப்போது தான் பகுத்தறிவுக்கு விடுதலை, பாட்டாளி உலகுக்கு விடுதலை, எனக்கும் விடுதலை, இன்றேல் படுகொலை!

கொலை...? ஆம். அந்தச் சண்டாளன்! நயவஞ்சகப்பாவிப்பயல், விஸ்வனைப் போன்றவர்கள் கொலை செய்யப்பட வேண்டியதே தான்! ஆனால், விமலா...? என் அருமை விமலாவின் கதி...? விதவை? ஆ...! விமலா விதவை!! என் அன்பே நீ விதவை!!! நீயா விதவை?

நான்? கொலைகாரன்...! இல்லை. நானில்லை......கொலைகாரன் நானில்லை...அய்யோ! விமலா நீகூட நம்பி இருப்பாயோ...? இல்லை. நம்பாதே...என் அன்பே! நீ நம்பாதே......நானில்லை கொலைகாரன்......அய்யய்யோ கொலை! விதவை!; விதவை!! கொலை!!; கொலை!!! விதவை!!

[என்றலறிக் கீழே விழுந்து மயங்குகிறான்.]

(2ம் பக்கத்தொடர்ச்சி)

சிந்திக்கிறார்கள் என்றால் எப்படி ஏழையை ஏய்த்து, சுரண்டி அவன் இரத்தத்தைஉறுஞ்சலாம் என்பது தான். இவைகள் சிந்தனை அல்ல கெடுக்கும் எண்ணங்கள்—வேண் டப்படாத போக்கு. இந்த நாட் டில் இன்றைக்கு எத்தனைபேர் நாட்டின் நிலைகுறித்தும், சமுதா யப்பொருளாதாரஅமைப்புகளைப் பற்றியும் சிந்திக்கிறார்கள்?

நாடு உருப்பட வேண்டுமானால் மக்கள்நல்லறிவாளர்களாகத் திகழ வேண்டும். அறிவு வளரவேண்டு மானால் மக்கள் இதயங்களில் சிந் தனை இடம்பெற வேண்டும். அறிவுலகத்தில் தன்னிகாற்று உல வும் சமுதாயத்தினராக நாட்டு மக் கள்—திராவிடநாட்டுமக்கள் முன் னேற வேண்டும். மக்களின் அறி வை வளர்க்க—சிந்தனைப்பொன் னொளியைத் தூண்டிவிட ஒவ் வொரு மனிதனும் பாடுபடவேண் டும். தன் சுற்றுச்சார்பிலுடையவர் களுடைய அறியாமையை விலக்கி அறிவைப் புகுத்த ஒவ்வொரு வரும்முற்படவேண்டும். நாடு உருப் பட நாம் கைகொள்ளவேண்டிய வழி இவை.

அறியாமை இருள் படர்ந்திருக் கும் இதயங்களில், அறிவின் ஒளி யைப் பரப்ப முற்படும்போது, சில பல தடைகள் நம் முன்னே வந்து நிற்கின்றன. உதாரணமாக நடை முறையிலுள்ள ஒரு பழக்கத்தைக் கண்டித்து அதைக் கைவிடவேண் டுமென்று கூறும்பொழுது அது பழங்காலம் தொட்டு—பாட்டான் முப்பாட்டன் காலத்திலிருந்து— பழக்கத்திலிருப்பதால் நாமும் பின்பற்றி விட்டுப் போவோமே என்று பகட்டாகக் கூறுவர், புது மையைஏற்கச்சக்தியற்ற பழைமை விரும்பிகள் கேட்க மறுத்து, விலக்கவேண்டியதின் அவசியத்தை விளக்கிக் கூறிடில், "கேடு நேர்ந் திடும் நரகம்தான் கிடைக்கு" மென்று மிரட்டுவர். நரகமாவது, மோக்ஷமாவது இவையெல்லாம் சுத்தக் கட்டுக்கதையென்று கூறி னால் நம்மை நாத்திகன்என்றுகூறி விட்டு நகர்ந்து விடுவார்கள் பழை மைக் காதலர்கள். இந்த அப் பாவி மனிதர்களால் சமுதாயத்திற் கும்—நாட்டிற்கும் பெரும் சுமை யே தவிர பலன் எதுவும் இல்லை.

மனித வர்க்கத்தின் சிந்தனை வளர்ச்சியை வேலியிட்டுத் தடுப் பது மதமும் கடவுளும்தான். அடுத்தபடியாக உள்ளது அரசாங் கம். முடியாட்சி இருக்கும் ஒவ் வொரு நாடும் மதத்தைப் பாது காப்பதிலேயே கண்ணும் கருத்து மாக இருந்திருக்கின்றன. மனி தனை மடையனாக வைத்திருந் தால் தவிர முடியாட்சி நிலைக் காது என்பதை அந்தக்கால அர சப் பரம்பரையினர் உணர்ந்திருந் தனர். அவர்களுக்கு மத குரு மார்களும் ஒத்துழைத்தனர். மனி தன் குழந்தையாகத் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் பருவ முதல், கல்லூரியில் பயிலு கின்ற காலம் வரைக்கும் வலுக்கட் டாயமாக மதபோதனை செய்யப் பட்டு மடையனாக்கவே முயற் சித்து வந்தனர். குழந்தை மாண வனாகிப் பிறகு மனிதனாகிய பொழுது சுயமாகப்பகுத்தறிவைக் கொண்டு சிந்திக்கத் தலைப்பட்டு அதன்வழி செயலாற்ற முற்பட் டான். அப்பொழுது அரசாங்கம் அவன் செயல்களுக்குத் தடை யிட்டும், சிலரை நாடு கடத்தியும் சிந்தனை வளர்ச்சிக்குத் தடை யிட்டு வந்தது. தலை சிறந்த சிந் தனையாளரான சாக்ரடீஸ் விஷ மிட்டுக் கொல்லப்பட்டார். கார ணம், சிந்தனை, ஆட்சிப்பீடத்தை ஆட்டிவைக்கும் ஆற்றல் பெற்றி ருந்தது. இவையெல்லாம் மேலை நாடுகளில் நடைபெற்று வந்தவை கள்.

மேலைநாடுகளில் இதுபோன்ற கொடூர நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்த காலங்களில் இங்கு மனுநீதி தவறாத மன்னர்கள் ஆண்டு வந் தார்கள் என்று சிலர் பெருமை யாகப்பேசிக்கொள்கின்றனர். அக் காலத்தில் இங்கு நடந்த கொடு மை எண்ணற்றன. மதத்துறை யில் மாறுபட்ட கருத்தும், கொஞ் சம் சீர்திருத்தப்போக்கும் உடைய வர்கள் என்ற காரணத்திற்காக எண்ணாயிரம் சமணர்களைக் கழு விலேற்றிக் கொலை செய்தது இந்து மதத்தின் மனுநீதியை அடிப் படையாகக் கொண்ட ஆட்சிக் காலத்தில்தான். அன்று மட்டு மென்ன, இன்று; ஓமந்தூரார் ஆட்சியில் சிந்தனையாளர்களான திராவிடர் கழகத்தினருக்குக் கிடைத்திருக்கும் பரிசு சிறைக் கூடம் தானே? இந்த நாட்டுத் தேசியவாதிகளும் மக்களை மடை யர்களாகவே—பகுத்தறிவற்றகாட் டுமிராண்டிகளாகவே வைத்து என் றென்றும் ஆள நினைக்கிறார்கள்.

காலமும் ஆட்சியும் மாறிற்றே தவிர கருத்தில் மாற்றம் ஏற்பட்டி ருப்பதாகத்தெரியவில்லை. மேலை நாட்டு மக்கள் சில நூற்றாண்டு களுக்கு முன்பே சிந்திக்கத் தொடங்கி விட்டனர். பகுத்தறிவுப் பாதையில் தலை நிமிர்ந்து சென்று உலகிற்கு வழி காட்டியாக வாழ்கின்றனர். நாமோ பண்டைய காலப் பெருமைகளைப் பேசிக் கொண்டு பழைமையில் நெளியும் புழுக்களாகவே இருக் கின்றோம். இந்த நிலையில் இருக் கும் நம்நாடு உருப்படுமென்று எப் படிக் கூறமுடியும்?

நாட்டை உருப்படச் செய்ய உள்ள ஒரே வழி மக்களின் சிந்த னையை வளர்ப்பதுதான். மக்க ளின் சிந்தனை வளர்ச்சிக்கு தடை கல்லாக மதம், கடவுள், அரசாங் கம் இவற்றுள் எது குறுக்கே நின் றாலும் அதைத் தகர்த்தெறியத் தயங்கக்கூடாது. மக்கள் இதயங்க ளைச் சிந்தனைக் கூடங்களாக மாற்றியமைக்காதவரை நாடு உருப் படாது. சிந்திக்காத நாடு சிறப்பு றாது, சீரழிந்துதான் போகும். ஆகவேதான் மக்களின் சிந்த னையை வளர்க்கும் மகத்தான பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். நமது பணியில் நாம் பெறும் வெற்றி தோல்வியைப் பொறுத்தி ருக்கிறது நாடு உருப்படுவதும் உருப்படாது போவதும்.

தனி மனிதன் ஒவ்வொருவனும் நாட்டு நிலை உணர்ந்து, உண்மை யறிந்து, சரியாகச் சிந்தித்து, உழைத்து உயர்வுக்கு வழிதேடாத வரை நாடு உருப்படாது" நாடு உருப்பட மக்களின் சிந்தனை வளர்ந்தோங்க வேண்டும். காலம் சிந்தனையை வளர்க்கட்டும். நாமும் நம்மால் இயன்றவரை மனித வர்க்கத்தின் சிந்தனையைத் தூண்டிவிடப் பணியாற்றுவோம்.

"புத்ததாசன்"

பெரம்பூர்
கழக 3வது ஆண்டு விழா!

மாயவரம் தாலுகா பெரம்பூர் திரா விடக் கழகத்தின் 3வது ஆண்டு விழா 6-2-49ம் நாள் ஞாயிறன்று மாலை 5 மணிக்குக் கடைத்தெருவில் நடை பெறும். விடுதலை ஆசிரியர் தோழர் எஸ்.குருசாமி பி.ஏ. அவர்களும்மற்றும் பலரும்சொற்பொழிவாற்றுவார்கள்.

ஏழை தீர்ப்பு

தாமஸ் மசாரிக்

விலை அணா **12.**

[முயற்சி வெளியீடு, 64-டிஸ்பென்சரி ரோடு, பல்லாவரம், சென்னை]

ஏழை வண்டியோட்டியின் மகன்! எப்படி எப்படியோ முயன்று, எவ்வளவோ தொல்லைகளுக்கிடையே பட்டப் படிப்பு! வாழ்வுக்கு மார்க்கமில்லாத நிலையில் கருத்தொருமித்த காதல் மணம்! பேராசிரியர், நாடாளும் மன்றத்தின் உறுப்பினர்! பின் நாட்டையே ஆளும் தலைவர்!

இது கற்பனையல்ல, செக்கஸ்லோவேகியாவின் முதல் ஜனாதிபதி தாமஸ் மசாரிக் அவர்களின் வாழ்க்கைச் சரிதம். அன்றைய செக் நாட்டிற்கும் இன்றைய தமிழ் நாட்டிற்கும் எத்தனையோ வழிகளில் காணப்படும் ஒற்றுமையை எண்ணும்போது, தமிழறிந்த ஒவ்வொருவரும் இதைப் படிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக வைக்கத் தகுந்த முறையில், நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

திராவிடன் பதிப்பகக் காலண்டர்.

கிடைக்குமிடம்:—

P. B. நெ. 18, வேலூர் **N. A.**

தந்தை பெரியார், தளபதி அண்ணா, கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் படங்களைத் தனித் தனியே கொண்டதாய், டெம்மி 1×2 சைஸில் அழகிய ஆர்ட்தாளில் கண்ணைக் கவரும் முறையில் அச்சிடப்பட்டு 49-ம் வருஷக் காலெண்டரைப் பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கின்றனர். இவற்றைத் தோழர்கள் பெரிதும் ஆதரித்து வாங்குவார்கள் என்பது நிச்சயம்.

அண்ணா பாக்கெட் காலெண்டர்

விலை ஒரு அணா.

கிடைக்குமிடம்:-

நா. அப்பாசாமி,
14 நாகப்ப முதலிதெரு,
கோமளீஸ்வரன் பேட்டை,
சென்னை 2.

திருவள்ளுவர் விழா.

கண்ணகி கழகம்.

(*○*)

அரண்மனை நகரம் ஜன. 25.

அரண்மனை நகரம் கழகத் தலைவர் தோழர் சுப. பெ. வீரப்பா அவர்களால், திருவள்ளுவர் ஆண்டு தைத்திங்கள் பத்தாம் நாள் மாலை காரைக்குடி நகரசபைத்தலைவர் தோழர் ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில், நகரத்தாரகத்தில், வள்ளுவர் விழா நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் கண்ணகி கழகத்தாரால் நடைபெறும் வள்ளுவர் விழா மிகவும் போற்றத்தக்கதென்றும், இத்தகைய நற்காரியங்களுக்கு முன்வந்து ஏற்பாடு செய்த அன்பர் சுப. பெ. வீரப்பா அவர்களின் ஆர்வம் மிகவும் குறிப்பிடத்தக்கதென்றும்கூறி, வள்ளுவரின் சிறப்புக்களையும் அவர் குறள் உலகுக்கு வழிகாட்டியாய் உள்ளதென்பதையும் பற்றி விரிவாகக் கூறினார்கள். காரைக்குடி பள்ளி ஆசிரியர் தோழர் அமிர்தலிங்கன் அவர்கள் சொற்பெருக்காற்றினார். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் பாராட்டித் தலைவர் முடிவுரைகூற வந்தன வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

வேலூருக்குத் தளபதி வருகை!

—()⊛()—

13—2—49ல் வேலூருக்கு அடுத்த கஸ்பாவில் திராவிடர் கழக ஆண்டு விழா நடைபெறும். தளபதி அண்ணா அவர்கள் தலைமை வகிப்பார்.

மாலையில் கோட்டை வெளியில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் தளபதி அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

கிடைக்கப்பெற்றோம்.

மகாத்மா காந்தியடிகள் அருளிய

அஹிம்சா மலர்மாலை

கிடைக்குமிடம்:—

தென்னிந்திய ஜீவரக்ஷா
பிரசாரசபை,
132, தங்கசாலை வீதி
சென்னை 1.

அகில திருவிதாங்கூர் ஜாதி ஒழிப்பு மகாநாடு

நாகர்கோவில் ஜனவரி 29.

இம் மகாநாடு இம்மாதம் 28-1-49ல் நாகர்கோவில் அசோகா தியேட்டரில் தோழர் எஸ். வி. முத்துக்கருப்பன் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. டெல்லி அ. கி. சபை அங்கத்தினர் தோழர் ஆர். சங்கர் பி. ஏ. பி. எல்., அவர்கள் மகாநாட்டை திறந்து வைத்தார். ரேஷனலீஸ்ட்பார்ட்டித் தலைவர் தோழர் ஆர். ராமலிங்கம் பிரதிநிதிகளை வரவேற்றுத் தனது வரவேற்புரையை நிகழ்த்தினார்.

மகாநாட்டில் மகாத்மா காந்திஜி' நாராயணகுரு, பெரியார் ஈ. வெ. ரா கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் முதலியோர்களின் உருவப்படங்களைத்திறந்துவைத்தும், தீர்மானங்கள் கொண்டுவந்தும் தோழர்களான ஆர். ரவீந்திரன், பி. கணபதி, ஆர். இராமலிங்கம், பி. மகாலிங்கம், கே. மதியழகன், ஏ. சி. சுந்தரம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, நிர்மலானந்த யோகி எம். ஏ. பி. சுவாமி ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

மகாநாட்டில் ஆலய நுழைவு உரிமையை அனைவருக்கும் அளித்த மன்னருக்கு நன்றி தெரிவித்தும், ஜாதிப் பெயரைக் குறிப்பிட்டுப் பேசுவதையோ எழுதுவதையோ மக்கள் விட்டுவிடவேண்டுமென்றும், அரசாங்க அலுவலகங்களும் அவ்வாறே சாதிகளின் பெயரைக் கேட்டு பதிவுசெய்யக்கூடாதென்றும், சாதிப் பெயரால் கேட்கப்படும் எத்தகைய நிலையங்களுக்கும் அரசாங்கம் லைசென்ஸ் கொடுக்கக்கூடாதென்றும், இந்து கோவில்களில் எந்த உத்தியோகஸ்தையும் எந்த இந்துமே அடைவதற்கு வழிசெய்யவேண்டுமென மன்னரையும் மக்களையும் வேண்டிக்கொண்டும், தனிப்பட்டோர் கோவில்கள் என்று சொல்லப்படுவதிலும் எல்லோரும் செல்ல வசதி செய்யவேண்டுமென்றும், அறநிலையங்களின் செல்வங்கள் ஏழை மக்களின் பல தேவைகளையும் பூர்த்திசெய்வதற்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்வதாய் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE